# புலித்தோலும் எலிவாலும்! — (தம்பி)

© RAMAMOORTHY. M. O. L.

# திராவிடநாடு

19-2-56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா

கனவு பலிக்காது!

★

கோயில்கள்

★

கேலிப் பொருளாகிறார்!

★

அட, சுப்ரமணியம்!



## அட, சுப்ரமணியம்!

"அடாடா! காமராஜ், தட்சிணப் பிரதேசத்துக்கு உடனே சம்மதம் அளித்திருந்தால், புகழ் மாலைகள் எல்லாம் இவருக்கல்லவா கிடைத்திருக்கும்." என்று பேசினாராம் அமிருதசரஸ் மாநாட்டுக்குப் போயிருந்த நிதியமைச்சர் சுப்ரமணியம்!

அதனால்........

தட்சிணப் பிரதேசம் அமைப்பதில் காமராஜருக்கு சம்மதம் இல்லை போலும், என்று எண்ணிவிட வேண்டாம் எவரும். எனக்குப் பூர்ண சம்மதமே. எனக்குச் சம்மதமென்றால், காங்கிரஸ் M. L. A.க்களும் தலையாட்டி விடுவார்கள், தமிழ்நாடு காங்கிரசும் ஏற்றுக்கொண்டு விடும் என்பதும் உண்மைதான். ஆனால், இந்த மக்களிருக்கிறார்களே, அவர்களுக்காகத்தான் யோசிக்கிறேன் — என்று மழுப்பியிருக்கிறார் காமராஜர். 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு', என்று ஏன் இவர் சொல்லக்கூடாது, என்பீர்கள். என்ன செய்வது? தாசர் புத்தி தலைக்கேறியவர்களுக்கு தைரியமே இராதாமே! பயப்படுகிறார்!!

## மக்களின் அன்பு மாலை

'மேலிடத்தின்' புகழ்மாலைகளைக் காமராஜர் இழந்துவிட்டாரே என்று அங்கலாய்த்தாரே சுப்ரமணியம், அந்த மேலிடத்தின் அக்கினிக் கணைகள் அனுதினமும் துளைத்தாலும் என் மக்களுக்காகப் பாடுபடும் என்னை எவர் என்ன செய்ய இயலும் என்று அதே அமிருதசரசில் ஒருவர் காட்டியிருக்கிறார். பண்டிதரின் அன்புப் பார்வை பெற்றால் 'பதவித் துண்டு' கிடைக்கும்! ஆனால், அதைவிட சக்தியும் வலிவும் வாய்ந்த மக்களின் அன்பு எனக்கு இருக்கிறது, இதோ பாரீர், என்று காட்டிக் கொண்டிருக்கிறார் மாஸ்டர் தாராசிங்! காங்கிரஸ் மாநாடு நடந்த இடத்துக்கு அருகிலேயே தாராசிங்கின் அகாலிதளத்தினரும் மாநாடு நடத்தினராம். அகாலிதளம், அகில இந்தியக் கட்சியுமல்ல; ஆளும் கட்சியுமல்ல! நம்மைப்போல அடி, உதை, சிறை, தண்டனைகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் கட்சி! ஆனால், காங்கிரஸ்...? எவ்வளவு பெரிய கட்சி. 'இம்' என்றால் வெள்ளித் தோட்டாக்களை வீசப் பணதிபதிகள் உண்டு! ஓடிவந்து நிற்க

# கேட்டீரா, சேதியை!

அமெரிக்காவும் ரஷ்யாவும் கூட உண்டு! ஆனால், அமிருதசரசில் என்ன நடந்திருக்கிறது தெரியுமா?

## சொல்ல, வெட்கமாகுதே!

முக்கால்வாசிப்பந்தல், காங்கிரஸ் மாநாட்டில் காலியாக இருந்தது என்கிறது சுதேசமித்திரன். அதற்குப் பக்கத்தில் நடந்த தாராசிங் மாநாட்டில், காங்கிரஸ் மாநாட்டை விடக் கூட்டமாம்! இங்கே சாப்பாடு கிடைக்காமல் பிரதிநிதிகளும் நிருபர்களும் திண்டாடினார்களாம். சில பட்சணக் கடைகளிருந்தனவாம். ஆனால் அவைகளின்மீது மொய்த்துக்கிடந்த ஈக்களைக் கண்டதுமே குமட்டல் எடுத்ததாம்! ஆனால், அகாலி மாநாட்டில் இலவசமாகவே எல்லோருக்கும் சாப்பாடுபோட்டார்களாம். சில காங்கிரஸ்காரர்கள் கூட அங்கேபோய்ச் சாப்பிட்டு விட்டு வந்தனராம்.

## அவரும் இவரும்

நமது நேருபண்டிதருக்கு அகாலிதள மாநாட்டிற்கு வந்து செல்லுமாறு தாராசிங், அழைப்பு அனுப்பியிருந்தாராம்— எனினும் போகவில்லை! அதே சமயத்தில், காங்கிரஸ் மாநாட்டுக்காரர்கள் தாராசிங்குக்கு 'சிறிது நேரமாவது வந்துபோங்கள்' என்று விசேட அழைப்பு அனுப்பினார்களாம். அதை மதித்து, தாராசிங், காங்கிரஸ் மாநாடுக்கு வந்து 'சிறிதுநேரம் இருந்துவிட்டுப் போனாராம்! அதை, 'கொட்டை' எழுத்துக்களில் போடுகிறது, தினமணி ஏடு. தாராசிங், பண்டிதரின் கருணையை எதிர்பார்ப்பவரல்ல! மக்களுக்காகப் பாடுபடுபவர் என்பதால் அவருக்கு மதிப்பளிக்க நேர்ந்தது காங்கிரசுக்கு! மனதில் அருவை, வெறுப்பு இல்லாமல் அவரும் வந்து கலந்துகொண்டு போயிருக்கிறார்.

## இந்தக்கதி வரக்கூடாது!

என்னயிருந்தாலும், அமிருதசரசிலே நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு இந்தக்கதி வந்திருக்கக் கூடாது? அது நடக்கும், இது நடக்கும் — ஜாலவித்தையுண்டு — சர்க்காரின் காட்சிகள் உண்டு— நாடகம் உண்டு நடனம் உண்டு என்றெல்லாம் விளம்பரப்படுத்தியும்கூட மக்கள் திரளவில்லையல்லவா? அதுமட்டுமின்றி, மாநாடே போலீஸ் பாராவுடன் நடைபெற்றதாம்! சுதேசமித்திரன் கூறுகிறது, "5-கஜ தூரத்துக்கு ஒரு போலீஸ்காரர் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். சிலவிடங்களில் போலீசார் இயந்திரத் துப்பாக்கியுடன் (டாமிகன்னுடன்) நின்றனர். 100-பேருக்கு ஒரு போலீஸ்காரர் வீதம் நின்றனர். மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம முதலிய இடங்களிலிருந்தும் போலீசார் கொண்டு வரப்பட்டிருந்தனர்" எப்படி காங்கிரஸ் மாநாடு! இவ்வளவு இருந்தும், பஞ்சாப் முதலமைச்சர் கடிகாரத்தைப் பறிகொடுத்தாராம்— ஜேப்படிக்காரர்களுக்கு நல்ல வேட்டையாம்—கலை நிகழ்ச்சியொன்றில் 'காலிகள்!' புகுந்ததால் பெண்கள் எல்லாம் துவைக்கப்பட்டனராம்— முதலமைச்சரே நசுங்கவும் 20-பேர் மயக்கமடையவும் நேர்ந்து, நிகழ்ச்சி ரத்துசெய்யப்பட்டதாம். அதோடு, மாநாட்டுக்குள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் செல்லவும், உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழும்பவும், தடைபோடப்பட்டிருந்ததாம். ஆனால், அகாலிகள் மாநாட்டில் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் செல்ல அனுமதியளிக்கப்பட்டிருந்ததாம்!!

## ஒரே நாற்றம்

தினமணிதெரிவிக்கிறது, மாநாடு நடந்த, ஷகீத் நகரில், மிகமிகக் கவலையுடன் காணப்பட்டவர்கள் சுகாதார அதிகாரிகள்தானாம். அவர்களில் ஒரு அதிகாரி, மூக்கைப் பிடித்தவண்ணம் "இதைப்பற்றிப் பேசாமலிருப்பதே நல்லது," என்றாராம். அவ்வளவுநாற்றமடித்துவிட்டார்களாம், வடநாட்டுக்காரர்கள்! அதுதான் அவர்களைப்பார்க்கும்போதே தெரிகிறதே—ரயிலில் அவர்கள் வந்துவிட்டால் நெருங்கவா முடிகிறது, நம்மால் எனலாம் நீங்கள். ஆனால். நம்ம சுப்ரமணியத்துக்கு அப்படிப்பட்டோரின் புகழ்மாலைதானே, தாய்நாட்டைவிடப் பெரிதாகத் தெரிகிறது!! கோடிக்கணக்கான மக்களைவிடப் பெரிதாகத் தெரிகிறது!! அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 34
19-2-56

# ★ தமிழ் முழக்கம் ★

"வீண் குரல் எழுப்புவதாகக் கூறுவோரே, சவால் விடுகிறேன் உமக்கு. பாராளுமன்றத்தின் உறுப்பினராக எந்த மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பினரோ, அவர்களது குரலை நான் எதிரொலிக்கிறேன். இதனை வீண் குரல் என்று கருதுவீர்களேயானால், இதோ இருக்கிறது என்ராஜினுமா! இன்றே, ஏற்றுக்கொள்ளுங்கள். என்னுடைய தொகுதியில், மீண்டும் தேர்தல் நடத்துவீர்களல்லவா? இன்று, எந்தப் பிரச்னையை நீங்கள் மறுக்கிறீர்களோ, அதே பிரச்னையைவைத்து அப்போதும் போட்டியிடுவேன்! பார்க்கலாம், ஒரு கை— அப்போதாவது, பார்முழுதும் உணரட்டும் உண்மையை — அநீதி இழைக்கிறீர்கள் என்பதை அனைவரும் அறியட்டும்!!" என்று கூறி மக்கள் சபைப் பதவியை விட்டு விலகினர், சுந்தரலிங்கம் என்பார்.

எங்கே, இது! தமிழகத்திலா? பெயரைப்பார்த்தால் தமிழர்போலுள்ளதே—என்று நினைப்பீர்கள். தமிழர்தான், அவர்! ஆனல், நடைபெற்றது இங்கல்ல, இலங்கையில்!!

தமிழை மதிக்க மறுக்கும் மாண்பற்ற செயலை எடுத்துரைக்கவேண்டி, சுந்தரலிங்கம் வீசியெறிந்தார், விலகல் கடிதத்தை முன்பு.

இதோ, பிப் 14-ந்தேதி வெற்றிச் சேதியும் வருகிறது! நல்லதோர் பிரச்னைக்காகச் சவால்விட்ட அவர் வெற்றிபெற்றுவிட்டார் — வீம்பாட்சி நடத்தும் இலங்கையரசு தோல்விகண்டுவிட்டது! அதே தொகுதியில் நடத்தப்பட்ட, துணைத் தேர்தலில் தமிழ் உரிமைகோரிய இவர் பெற்ற வாக்குகள் 8995. எதிர்த்த, யு. என். பி. எனும் ஆளும் கட்சியின் பிரதிநிதி பெற்ற வோட்டுகள், 2003!!

துணைத் தேர்தல், இலங்கை வாழ் தமிழர் தம் உரிமை முழக்கம் எவ்வளவு நியாயமானது என்பதை மட்டுமல்ல, அதனைப் பெற எவ்வளவு தீவிரமாகத் தமிழ் உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் விளக்குகிறது.

இதோ, இன்னும் ஓரிரு வாரங்களில், இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. வெற்றிபெற்ற சுந்தரலிங்கம், மன்றத்தில்போய் அமரக்கூட நேரம் இல்லை! அதற்குள் சபை கலைக்கப்பட்டு, மறு தேர்தல் வரப்போகிறது. மீண்டும், பதவியில் அமரவேண்டுமானல், அந்தத் தேர்தலிலும் நின்ருல்தான் முடியும்.

கக்கனே, காமராஜோ, எவராயினும் சரி, இப்படி ஒரு இக்கட்டுக்குள் அகப்பட்டுக்கொள்ளச் சம்மதிக்கமாட்டார்கள் இங்கே!

ஆனல், இலங்கைவாழ் தமிழ் இனத்தவருக்கு, தமிழுக்குச் சரியிடம் தேடித் தரவேண்டுமென்கிற பிரச்னை கண்ணுக்குப் படுவதால், பதவியைத் துச்சமெனக் கருதி, மக்களின் குரலுக்காகப் போராடுவோம், நியாயத்துக்காகப் போராடும் நம்மை எப்படியும் மக்கள் எத்தனை தேர்தல் வந்தாலும் ஆதரிக்காமற்போகமாட்டார்கள் எனும் துணிவு, சுடர்விட்டுக்கொண்டிருக்கிறது, இதயத்தில்.

தமிழுக்கு, சரியிடம் வழங்கப்படவேண்டும்— சிங்களத்தைப்போல் தமிழும் அரசுமொழியாக அங்கீகரிக்கப்படவேண்டும் — அதை மாற்றிவிட்டு, சிங்களத்தை மட்டும் சர்க்கார் மொழியாக்கச் செய்யும் முயற்சியை 'அணுவளவும் அனுமதியோம்—என்கிற முழக்கங்கள், எந்தளவுக்கு வலிவும் பொலிவும் பெற்று அங்கேவிளங்குகிறது என்பதை இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

இலங்கை வாழ் மக்களின் மொத்தத் தொகை 81-லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் தமிழ் பேசும் மக்களின் தொகை 24-லட்சமாகும்; அதாவது நூற்றுக்கு முப்பது சதவிகிதம். இவர்களில், பன்னிரண்டரை பேருக்கே வோட்டுரிமை என்று 'வடிகட்டி' அளித்திருக்கின்றது, கொத்தலாவலை சர்க்கார்! இது அநீதி—அக்கிரமம்— இப்படி வடிகட்டிப் பழிவாங்கலாமா — ஓட்டுரிமையில்லாதவர்களை விரட்டுகிறீர்களே, சரியா—என்று, தமிழ் மக்கள் நீண்ட நாட்களாகப் போராடி வருகிருர்கள்! இங்கிருந்து பிழைப்புக்காகப்போயுள்ள தமிழர்களது நிலைகெட்ட வாழ்வை உணர்ந்து, அதற்குப் பரிகாரம் செய்யவேண்டிய பொறுப்பையும் வைத்திருக்கும் டில்லிபீடத்தின் பராமுகத்தால், அவர்களது நேர்மைக் குரலுக்கு வலிவு ஏற்படவில்லை இலங்கையில்! அடிக்கடி கொத்தலாவலை, நேருவைப் பார்ப்பதும், நேரு, கொத்தலாவலையுடன் விருந்து அருந்துவதும் நடந்து வருகிறது.

இந்த அநீதி துடைக்கப்படாமலிருக்கும் இந்தச் சமயத்திலேயே, இலங்கையைத் தாயகமாகக் கொண்டுவிட்ட தமிழர்தம் மொழியினையும் தட்டி அடக்க முயற்சிகள் துவக்கப்பட்டுவிட்டன.

தமிழும், சிங்களமும் ஆளும் மொழியாக இருக்க வேண்டும் என்பதுதான், சுதந்திரம் கொடுத்த ஆங்கிலேயன் ஏற்பாடு செய்துவிட்டுப் போனமுறை. அதற்கு முன்பும், இந்தச் சலுகையை தமிழர்கள் பெற்றிருந்தனர். இப்போது, அதற்கு, ஆபத்து வருகிறது!

தமிழினம், அடிபட்டு உதைபட்டு என்றும் அவதியடைவதேயே கடமையெனக்கொண்டிராது! கட்டுண்டு பொறுத்திருந்தோர், விழிதிறந்து வீரக்குரல் எழுப்பத் தயாராகிவிட்டனர், என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.—இலங்கையிலிருந்து வரும் தகவல்கள்.

★

# புலித்தோலும் எலிவாலும்!

தம்பி,

கிள்ளையும் நாகணவாய்ப் புள்ளினமும் அளித்திடும் இசையையும், சிரித்திடும் முல்லை பரப்பிடும் மணத்தினையும், வீசிடும் தென்றல் அளித்திடும் குளிர்ச்சியினையும், பெற்று மகிழ்ந்தவன்; இத்தனையையும் இவற்றினுக்கெல்லாம் மேலான தான 'காதல்' கனிரசத்தினையும் பருகிடும் பருவத்தினன்; சோலையும் சாலையும், வாவியும் வயலும், மாடமும் கூடமும், எங்கும் எழிலாளின் இன்முகம் அன்றோ தெரிகிறது; 'குறி' இடம் சென்று அக்குமரியிடம் கொஞ்சுமொழி பெற்று மகிழ்வதற்குத் தடையாகவன்றோ கதிரோன் கண்விழித்தபடி உள்ளான, அவனுக்கு மதி புகட்டிட வளர்மதியே வாராயோ! என்று எண்ணிடும் இயல்பினன்; கொழுகொம்பினைத் தழுவிடும் கொடியினையும், பெடையுடன் பெருமிதத்துடன் உலவும் அன்னத்தினையும், கண்டு காதல் தீ கொழுந்துவிட்டெரியும் உள்ளத்தினனாகி, தோழியின் பேருதவியைத் தொழுது பெற்று தோகையாள் வரக்கண்டு விழி கூத்தாட, மொழி குளற, வழி தெரிந்ததோ, வாடாப்பூ மேனியாளே! மனம் இளகிற்றோ இப்போதேனும்! அச்சமும் மடமும் அரிவையாககு அணிகலன தான, ஆயினும், பிஞ்சு நிலை சென்றுவிட்ட என்னை ஏறெடுத்தும பாராதிருந்திடலாமோ! என்றெல்லாம பேசி, ஏந்திழையாளை, அருவிக்கரைக்கு அழைத்து மருவி மகிழ்ந்திடும் மணாளன், பிறகோர் நாள், என்னை இக்காளை, பெற்றோர் ஈட்டிய பெரும் பொருளைத் தின்று தீர்த்திடும் போக்கினனாக உள்ளானே, குந்தித் தின்ருல் குன்றும் கரையும் எனும் மொழியினையும் இவன் அறியானோ! கடல் கடந்து சென்றேனும் பொருள் ஈட்டி வாழ்வதன்றோ பெருமைக்குரியது என்ற தமிழ் முறையை இவன் ஏனோ அறியாது போயினன் என்று, பெரியோர் பேசிடக் கேட்டு, பொருள் ஈட்ட வெளிநாடு செல்லக் கிளம்புவான்!— முன்னாளில் தமிழ் இளைஞன். செல்லுமுன், சேயிழையை அருகழைத்து ஆயிரம் உறுதி மொழிகளை அளித்து, முகம் துடைத்து, முத்தமளித்து, மெல்ல மெல்லச் சேதிதனைச் சொல்லுவான்; சொல்லக் கேட்டதும் அனலிடை மெழுகாவாள்; புனல் பொங்கிடும் கண்களைக் கண்டு கலங்குவான், அவன்; "பொன்னா வேண்டும்?" என்று கேட்பாள் அப்பூவை, அதைப் பெற என்னைப் பிரியவா துணிந்தீர் என்பாள்; உமக்கு அந்தத் துணிவு ஏற்படக்கூடும், ஆடவருக்கே அது இயலும், எனினும் என்னிடம் கூறுகிறீரே, நான் அதைக் கேட்டுக் கொள்ளும் துணிவு உடையவளோ என்பாள—இவ்வளவும் மங்கையரின் தனிமொழியாம் கண்மூலம்! பொன்னும் வேண்டாம், பொருளும் வேண்டாம், மின்னிடும் கண்ணொளியே போதும். பேச்சுக்கும் ஏச்சுக்கும் அஞ்சினேன், பிறிதொன்றில்லை. ஆடிப் பாடிக் காலங் கழிக்கிறான், பொருள் ஈட்டும் வகை அறியான் என்று பேசுவது கேட்டேன—பிரிய எனக்கும் மட்டும் மனம இடம தருமா? என்றெல்லாம கூறி, அவளை அருகே அழைத்து, கண்ணீர் துடைத்திடுவான். பொருள் பெறப் பிரிதல் — இத்துணை இடர்ப்பாட்டுடன துவங்கும். எனினும், அதே மங்கை, அத்தமிழ்மகன பொருள் ஈட்ட அல்ல, புகழ் ஈட்ட, தாயநாட்டின மானம் காக்க, உரிமையை அழித்திட எண்ணிடும் உலுத்தரின் கொட்டத்தை அடக்கிக் களம் செல்லக் கிளம்புங்காலை, கண்ணீர் சிந்தியோ, கரம் கூப்பியோ, தடுத்து நிறுத்தியோ, தழதழத்த குரல் காட்டியோ, காதற்கணவனை இல்லத்தில் இருந்திடச் செய்வதில்லை! வாளையும் வேலையும் எடுத்துத் தந்து வாகையுடன் திரும்பிவாரீர் என்று கூறி வழியனுப்பிவைப்பாள்! ஆற்றல் மறவர், அவர் தமக்கு ஏற்ற மகளிர்!!

எல்லையைக் கடந்து பகைவன் வந்ததில்லை — வந்தவன் தோற்ரோடாமல் இருந்ததில்லை!

பிறருடைய கொல்லையில்கூடத் தமிழன், காரணமற்று நுழைந்ததில்லை — எனினும், தாயகத்தில், ஒருபிடி மண்ணையும் மாற்ருன் கவர்ந்திட விட்டதில்லை.

வேண்டிக் கேட்பவனுக்கு இன்னுயிரும் தருவான்; பகை எனிலோ எழு கடலையும் கலக்குவான்!

கட்டழகியின் கட்டளைக்குக் கட்டுண்டு, மலர் கொய்து தருவான்— அதே கரங்கள், தாயகத்தை இழித்துரையாடுபவனின் தலையினைக் களத்தில் கொய்திடும்.

செம்பஞ்சுக் குழம்பெடுத்து அவள் பாதத்தில் தடவி மகிழ்பவன், மாற்ருன் வீசிய வேல், மார்பிலே பாய்ந்திட, அதனை அப்புறப்படுத்தும்போது, கொப்பளித்துக் கிளம்பும் குருதியைக் கண்டு களித்திடுவான், களத்தில்.

வீரமிக்க நாட்களைப் பற்றி விரித்துஉரைத்



திடும் ஏடுகளிலே காணக்கிடக்கும் சொல்லோவியம், பலப்பல.

எந்நாட்டவர் கண்டறியினும், நாமேன் இந்நாட்டவராகப் பிறந்தோமில்லை என்று எண்ணுவர், அத்துணை ஏற்றம்பெற்று வாழ்ந்தனர், கொற்றம் இழக்காத நிலையிலிருந்த தமிழர்!

இன்று? கொற்றமில்லை; அஃது இல்லையே என்ற மனக் குமுறலும் போதுமான அளவு எழக் காணோம்.

புகழ் ஈட்டச் சொல்லுங்கால், பொற்கொடியும் தடுத்திடாள், பழந் தமிழ் நாட்டில் என்று செப்பும் ஏடுகளே, செல்லரித்துக் கிடக்கின்றன!

எனவேதான், இன்று, எவனுக்கும், இந்நாட்டில் எதனையும் செய்து வெற்றிபெற முடியும் என்ற துணிவு பிறந்துவிட்டது; பணிவோனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்படும், எதிர்த்திடுவோனை இருக்குமிடம் தெரியாமல் ஒழித்திடுவேன் என்று —வீரம்பேசுகின்றனர், பிற பிரச்சினைகளிலே பேரம் பேசிப் பணிந்திடும் பெருந் தலைவர்கள்!!

எல்லை குறைந்துபடும், அதனாலென்ன! எழிலிடங்கள் கவரப்படும், அதனாலுமென்ன! மொழி வழி அரசு அமைத்திட ஒப்பமளிக்கமாட்டோம், என்ன செய்துவிடுவாய்! உரிமை என்று நா உலரும்வரைக் கதறிக் கிட, இல்லை, இல்லை, அதனையும் நான் அனுமதிக்கமாட்டேன், ஏனெனில், கதறினால் உன் நா, உலருவது மட்டுமா, என் காதுமல்லவா குடையும், எனவே துக்கம் துளைத்தால் தாங்கிக்கொள். எதிர்த்துப் பேசினாலோ, இருப்பதும் போகும், அறிவாய், அடங்குவாய்—என்று, உலகுக்கெல்லாம் சாந்தம் போதிக்கும் நேரு பெருமகனாரே பேசுகிறார்!

கல்லினைக் கசடர் தலையில் ஏற்றியது அந்த நாள்! சுடுசொல்லினைத் தாங்கி, கருகிய உள்ளத்துடன், உழலுவது இந்த நாள்!!

தமிழகமே! தாய்நாடே! இத்துணை தாழ்ச்சியுறவோ நீ ஓர் நாள் அத்துணை ஏற்றத்துடன் பொலிவினைக் காட்டி நின்றாய்!!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எழில் நிரம்பி இருந்தது என்று எல்லா வரலாற்றாசிரியரும் எடுத்தியம்புகின்றனர்! ஏ! ஏ! இதென்னகாட்டுமிராண்டிப்பேச்சு! என் மொழி! என் இனம்! என்நாடு! என் அரசு! என்றெல்லாம் பேசுகிறாயே! என்று ஏசுகிறார் நேரு பெருமகனார்!

இந்த இழிநிலையினைத் தாங்கிக் கொள்ள மறுக்கும் தமிழர் உளர், இந்நிலையினை ஒழித்திட, தளராது உழைத்திடுவோம் என்று 'சூள்' உரைத்துக் கிளம்பும் தமிழர் உளர், தமிழர்க்குத் தமிழ் நாடு வேணடும், தமிழ் நாட்டுக்குச் சொந்தமான இடம் பிற நாட்டுடன் பிணைபட்டு இருந்திடும் கொடுமை களையப்பட வேண்டும், எல்லை குறைதல் கூடாது, எமது இடத்துக்கு உரிய பெயராம் தமிழ்நாடு என்பதே எமக்குவேண்டும்இவை தமைமறுத்திடும் போக்கில், மாய்த்திடும் கருத்துடன், வடநாட்டு ஆட்சியாளர் வகுத்துள்ள சூதுத் திட்டத்தை, அக்ரம ஏற்பாட்டை, அநீதியான தீர்ப்பை, நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். உரிமையும் நீதியும் கிடைக்கும்வரை போராட நாங்கள உறுதிகொண்டுவிட்டோம், கொடியும் கோட்டையும் வேறு வேறு, போக்கும் நோக்கும் பிற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், வேறு வேறுதான், எனினும், தமிழ்நாடு அமையவேண்டும், அது எல்லை குறையாத, ஏற்றம்கெடாத,உரிமை பெற்ற, மொழிவழி அரசாக மலர வேண்டும் என்பதிலே, நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறோம் இதற்கு முனபு எப்போதும் ஏற்பட்டிராததோர் 'கூட்டணி' காணீர்!— என்று எடுத்துக் காட்டும், ஏற்புடைய நாள், எழுச்சியூட்டும் நாள், நாடு விழிப்புற்று இருக்கிறது என்று விளக்கிடும் நாள், தாயகத்தின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கிடும் வீரம் கொண்டோர் முதல்முழக்கம் தரும்நாள், பிப்ரவரி20.

பிப்ரவரி 20 என்ற நாள்பற்றி எண்ணிடும்போதே, தம்பி, பிற எந்த நாட்டாரும் பெற்றிராத எழிலரசினை நாம் ஓர் காலத்தில் பெற்றிருந்தோம் என்பதையும், பல்வேறு நாடுகள், பனி படர்ந்தும் பாலை மிகுந்தும், இடர் குவிந்தும் இயல்பு கெட்டும் இருந்திடுவதுபோலன்றி, வளமெல்லாம் குறைவறப்பெற்று, வாழ்விலே பெறத்தக்க பேறுகளை அடைவதற்கான அறிவாற்றலைக் கொண்ட மக்கள் மன்றமாக நமது நாடு, பன்னெடுங் காலத்துக்கு முன்பே பொலிவு பரப்பி வந்தது என்பதும், நினைவிலே நிற்க வேண்டும்.

வானிடை மிதந்திடும் தென்றலிலே,
மணிமாடங்கள் கூடங்கள் மீதினிலே
தேனிடை யூறியச் செம்பவள
இதழ்ச் சேயிழை யாருடன்
காதலின்பம் பெற ஆடிப்பாடி

மகிழ்ந்தும், பகல் இரவாகிவிட்டதோ என்று கூறத்தக்க வகையில் பெரும் புழுதி கிளம்பிட சுழலெனச் சுற்றிப் போரிட்டு வெற்றி காணும் வீரத்தைக் களத்திலே காட்டியும், அடிப்படை உண்மைகளை ஆய்ந்தறிந்து அவனியோருக்கு அளித்திடத்தக்க அறிவினை மன்றங்களில் விளைவித்தும், வந்த நம் தந்தையர் நாட்டிலே, இன்று, 'அண்டை அயலார்கள்' ஆதிக்கம் செலுத்துகின்றனர், பிழைத்திருக்க வேண்டுமானால், ஆளடிமை ஆகவேண்டும், என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

நீதி கேட்கிறோம் — வீதியில் நிறுத்திவைத்துச் சுட்டுத்தள்ளுவோம் என்கிறார்கள், நம் கொற்றம் பறித்தோர்.

எமது உரிமையும் உடைமையும் பறிக்கப்படலாமா என்று வாதாடுகிறோம், பேதையே! உயிரைவிட்டு வைத்திருக்கிறோமே, அது போதாதோ என்று கேட்கின்றனர், நம்மைப் பிடித்தாட்டும் பெருந் தலைவர்கள்!!

அமிருதசரஸ் காங்கிரஸ் மாநாட்டிலே, நேருபண்டிதர், நடுவீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதற்கு அங்கேயே பதிலளிக்கப்படும் என்று பேசி, கோபமூட்டப்பட்டால், நான் உயிரையும் மிஞ்சுபவனாகிவிடுவேன், என்று மிரட்டுகிறார்.

இத்தனைக்கும், தம்பி, பிப்ரவரி 20ல், நாம் நாட்டிலே என்ன நடைபெறவேண்டுமென்றுகூறுகிறோம்?

பாசறைகளைத் தாக்குக; ஆயுதக் கிடங்குகளைச் சூறையாடுக; அலுவலகங்களில் புகுந்து கலாம் விளைத்திடுக — என்றா கூறுகிறோம்? இல்லை, இல்லை, முக்காலும் இல்லை.

அமைதி! அமைதி! என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம்.

பலாத்காரம் அறவே கூடாது என்பதைப் பன்னிப் பன்னிக் கூறுகிறோம்.

பட்டி தொட்டிகளிலும் இந்த அறிவுரை பரவவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நமது பொதுச்செயலாளர், கழகத் தோழர்களை, ஆங்காங்கு கண்டு பேசி வருகிறார்!!

**கடை அடைப்பு — பொது வேலை நிறுத்தம் – காந்தியார் கையாண்ட தூய்மையான முறை — கருத்து கெட்டுக் கிடக்கும் ஆட்சியாளர்களுக்கு நல்லறிவு அளிக்கும் அறநெறி— இதுவே பிப்ரவரி 20ல் நாம் மேற்கொள்ளும் திட்டம்.**

**ரயில்களைத் தடுத்து நிறுத்துவதா என்று கேட்கின்றனர் நமது கழகத் தோழர்கள்—தம்பி! இது சர்வ கட்சிக் கூட்டணி, தி. மு. க. மட்டும் நடத்துவ தல்ல, எனவே, பணியாற்றச் செல்லாதீர் கள் என்று பாட்டாளிகளை வேண்டிக் கேட்டுக்கொள்வதும், அன்று மட்டும் பயணப்படாதீர்கள் என்று பொதுமக் களை வேண்டிக்கொள்வதுந்தான், நாம் கையாளவேண்டிய முறையே தவிர, தண்டவாளத்தில் படுப்பதோ, சங்கிலியைப் பிடித் திழுப்பதோ அல்ல, என் பதைத் தெளிவு படுத்தியிருக் கிறோம்.**

அணைவர் மனதிலும் அன்று ஓர் தூய்மை மலர வேண்டும் — மலரச் செய்யும் அளவுக்கு நம்மிடம் அன்பு முறை எழ வேண்டும் என்றுதான் நாம் அவாக் கொண்டுளளோம், ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் நமது நோக்கமே அல்ல.

நாட்டின் நல்லோர் நமது நோக் கத்தை அறிந்து, பாராட்டி, துணை தர முன்வந்துள்ளனர்.

துரைத்தனத்துக்குத் தூபதீப நைவேத்தியம் செய்து 'பிரசாதம்' பெற நினைக்கும் போக்கினர், நமது முயற்சியைக் குலைத்திட முயல்கிறார் களாம்! வெண்மேகத் தழகினையும், அது விதவிதமான உருவம் காட்டி உலவுவதையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓவியனைத் தீண் டிடக் கட்டுவிரியன், ஓசைப்படா மல், பசும்புற்றரையில் மறைந்து மறைந்து, வளைந்து வளைந்து வரு கிறதல்லவா! மனித இனத்தில் நற்காரியத்தைக் கெடுத்திடும் பேராற்றல் படைத்தவர்கள் இருக் கத்தான் செய்கிறார்கள்!

இவர்களெல்லாம் கூடி, இப்படி எல்லாம் செய்வதா? அது வெற்றி கரமாக நடப்பதா? அதை நான் கண்டு சகிப்பதா! என்று எண் ணும் 'நல்ல உள்ளம்' படைத்தவர் கள் இருக்கிறார்களே! புள்ளிமான் துள்ளி விளையாடக் கண்டு, செச்சே! அடவியில் நானிருக்க, அழகு மான் இப்படியா ஆட்டம் போடுவது என்று தானே சிறுத்தை பாய்கிறது! தம்பி! நாடு, சர்வ கட்சிக் கூட்டணியின் திட்டத் துக்குப் பேராதரவு தரத் தயாராகி விட்டது கண்டு, நடுக்கம் கொண்டு விட்டவர்கள், நானாவிதமான, நய வஞ்சகமும் செய்து, நமது அறப் போரின் தூய்மையைக் கெடுத்திட எண்ணங்கொண்டு, பல கூறுவர், நண்பர் போல், உசுப்பி விடுவர் உடன் இருந்துகொண்டு—மிகமிக விழிப்பாக இரு!! ஆமாம், தம்பி! மிகமிகப் பொறுப்பான செயலில் ஈடுபட இருக்கிறாய் என்பது மட்டு மல்ல, இதிலே கிடைக்கும் வெற்றி, வேறு பல நல்ல திட்டங்களுக்கு வித்தாகப் போகிறது!

தம்பி! இன்னுயிரையும் இழக்கச் சித்தமாகி, மாற்றானை விரட்டிடக் களம் சென்ற தமிழ் மரபிலே வந்து உதித்தவர்களை நாம் பிப்ரவரி 20ல் செய்யச்சொல்வதெல்லாம், அன்று தெருவெல்லாம் முடங்கி, நடமாட் டம் நின்று, அலுவல்கள் ஒடுங்கி, எங்கும் ஓர் அமைதியான செய லற்ற சூழ்நிலை தெரியச் செய்யுங்கள் — இங்கிலை கண்டால், முன்பு இனிக்க இனிக்கப் பேசினோமே, இப்போது, வேண்டி நிற்கும் மக்க ளிடம் கடுகடுத்த முகம் காட்ட லாமா என்பது பற்றியும் எண்ணிப் பாராமல், நெரித்த புருவத்துடன் நின்று, ஏகாதிபத்தியப் பொறி பறக்கும் போக்கில் பேசும் நேரு பண்டிதர், தம் கோலத்தை மாற்றிக் கொண்டாகவேண்டிய 'காலம்' வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்வார்; நீதி வழங்கும் நிலைக்கு வந்து சேருவார்!

முப்பதாண்டு காலமாக, கருவில் உரு வாகி வந்து, இன்று ஓங்கி வளர்ந்துள்ள உரிமை உணர்ச்சி, மொழிவழி அரசு என் பது.

மொழிவழி அரசு அமைக்காமல், ஆணவ வழியில் அரசு அமைத்துக் கொண்டான் ஆங்கிலேயன்; அவ னது ஆட்சி அழிக்கப்பட்டானதும் 'இந்தியா'வில், மொழிவழி அரசு ஏற்படும், என்று, 'மகாத்மா'வே வாக்களித்தார்.

மாநாடு தவறாமல், இதற்கான தீர்மானங்கள், நிறைவேற்றப்பட் டன; நாட்டு மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

தலைவர்கள் மேடைகளிலே பேசும் போது, இந்த மொழிவழி அரசு திட்டத்தை வலியுறுத்தினர் விளக் கினர், அதனால் கிடைக்கக்கூடிய சுவையும் பயனும் பற்றி உணர்ச்சி யூட்டினர்!

**காங்கிரஸ், தேர்தல்களின்போதெல்லாம் மொழிவழி அரசு ஆதரவு காட்டியே 'ஓட்டு' வாங்கிற்று.**

## இப்போது, 'நம்பிக்கை மோசடி' நடத்தத் துணிந்து விட்டனர்.

முதுபெருங்கிழவர் ஆந்திர நாட் டுத் தலைவர் பிரகாசம் கூறினார், ஆந் திர அரசு அமைந்த நாளில்,

**"மொழிவழி அரசு அமைப்புஇருத்தல்வேண் டும் என்ற தூய்மையான திட்டம் தந்த வர் தேசப்பிதா மகாத்மாவாகும். அவர் ஆணைப்படி, 'இந்தியா' மொழிவழி பிரிந்து, 21 அமைப்புகள் கொண்டநிலையில்தான் காங்கிரசின் அலுவலே நடைபெற்றுவந்தது"**

வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, மராட்டிய மாகாணக் காங் கிரஸ் கமிட்டி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, என்ற முறையிலேயே, காங்கிரஸ் கமிட்டிகள் பெரிதும் மொழிவழி அமைந்து பணியாற்றி வந்துள்ள பேருண்மையை பிரகாசம சுட்டிக் காட்டினார்.

மகாத்மாதான் மறைந்துவிட் டாரே, இனி அவர் தம் மணிவாச கந்தனைக் கல்லில் செதுக்கிவிடு வோம், நம் நெஞ்சினின்றும், அவர் தந்த நல்லறிவைக் கல்லி எடுத்து எறிந்திடுவோம், என்று துணிந்து விட்டனர், அவர் பெயர் கூறி ஆள வந்தார்களாகிவிட்ட மகானுபாவர் கள்.

'மொழிவழி அரசு' இருந்தால், மட்டுமே, உண்மை 'தேசீயம்' உறுதியான ஜனநாயகம் மலரும் என்று அறிவாளர் பலர் கூறினர்; ஆமாம் என்றனர் நேரு உள்ளிட்ட தலைவர்கள.

ஆள்பவருக்கும் ஆளப்படுவோ ருக்கும் ஓர் தொடர்பும் தோழமை யும் ஏற்பட்டால்தான், குடி அரசுக் கோட்பாடு தழைத்திடும், எனவே, அந்த அரசிலே உள்ள மக்களின் மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்; அம்முறைப்படி, ஆந்திரருக்கு அமையும் ஆட்சிமன் றத்தில் தெலுங்கு மொழிக்கு ஏற் றம் இருந்திடல்வேண்டும்; எனவே மொழிவழி அரசுவேண்டும் என் றனர், தேசீயம் அறியாதவர் களல்ல, அது நின்று நிலைத்து, கனிந்து சுவைதர யாது செயல் வேண்டும் என்பதனை அறிந்த அர சியல் நிபுணர்கள்.

'ஆந்திர நாடு' அமைக்கப்படுவ தற்கான திட்டம், டில்லி மக்கள் மன்றத்தில் அலசப்பட்டபோது, கட்ஜு கூறினர், "புதிய ஆந்திர மாகாணம், இனி அமைய இருக் கும் மொழி வழி அரசு அமைப்பு களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரி யாக இருக்கிறது. மக்கள் ஆட்சி மன்றங்கள், பல மொழி பேசும் இடங்களாக இருக்குமாயின், அங்கு, ஜனநாயகம் எப்படிச் சரி யாகப் பணியாற்றமுடியும் என் பதை என்னாலே புரிந்துகொள்

(15-ம் பக்கம் பார்க்க)

தொடர் சித்திரம்

# அறுவடை

7

அரங்கண்ணல்

ஓடிய கதை:—

[பிரெஞ்சுப் புரட்சியிலீடுபட்டு வெற்றி கண்டோர் விவேகப் பாதையை மறந்து வெறிப்பாதையில் உழன்றநேரம்...இராணுவ வீரன் விடால் என்பவரின் மனைவி அங்கெல், வெறியர்களால் விரட்டப்பட்ட சிராக் எனும் பிரபுவுக்கு அடைக்கலம் தருகிருள். பிரெஞ்சு அசெம்பிளி முன், ஒரு வியாபாரக் கோமானின் ஊழலைவெளிப்படுத்தச்சென்ற விடால், ஜெஸ்டு எனும் சுயநலக்காரனுல் விரட்டப்படுகிருன் வெளியே. உண்மை வீரன் விடால், உயிர்க்கே ஆபத்து வரும் என்பதை அறிந்த டாண்டன் என்பார், அவனை எச்சரித்து பாரீசை விட்டு வெளியேறும் அனுமதிச் சீட்டையும் தந்து அனுப்புகிருர். சீட்டுடன் வீட்டுக்கு வந்த விடால், "உடன் வருக, அவசரம்" என்று அதே டாண்டனிடமிருந்து வந்த அவசர ஓலையைக் கண்டு, செல்கிருன். அவன் வைத்துவிட்டுப் போன அனுமதிச் சீட்டை கைப்பற்றிக் கொண்ட சிராக்பிரபு, தன் மனதில் ஆண்டுபத்தாக நிழலோடிக்கொண்டிருந்த ஆசையால் அங்கெலைக் கட்டாயப்படுத்தி, வெளியில் வந்து நின்ற 'கோச்'சில் ஏற்றிக் கொண்டு கிளம்பிவிடுகிருன், ஊர் எல்லை தாண்டுவதற்குள், துரோகியிடமிருந்து அனுமதிச் சீட்டைக் கைப்பற்றிவிடலாம் என்கிற நம்பிக்கை ஒரு பக்கம்! நடுக்கம் இன்னெருபக்கம் அங்கெலுக்கு!! இந்நிலையில் வண்டி புறப்படுகிறது.................. காதகனிடம் அகப்பட்டுக்கொண்டோமே என்று தவித்துக்கொண்டிருந்த அங்கெல், ஓடும் வண்டியிலிருந்து குதித்துவிடலாம் என்று எண்ணியபொழுது, வண்டி 'திடீரென' நின்றது. திடுக்கிட்ட சிராக், வெளியே பார்க்க, மூவர்ணக் கோடுகள் ஓடிய கருப்புத் தலைப்பாகையுடன் ஒருவன் நிற்பது தெரிந்தது. அவன், வண்டிக்குள் எட்டிப் பார்க்கவே, சிராக் திகைத்தான்...........]

"என்ன பார்க்கிருய் இங்கே?" என்று இராணுவ மிடுக்குடன், கேட்டான் சிராக். இப்போது, விடாலுடைய வேடத்தையல்லவா, அவன் நடிக்கவேண்டும்? அதனுல் தான் அவ்வளவு கண்டிப்பாகக் கேட்டான்.

"யார், போகிறது?—என்று பார்த்தேன்"

"யாராயிருந்தால் உனக்கென்ன?"

"எனக்கென்னவா!" என்று பதிலளித்த அந்த ஆள், புன்னகையோடு பார்த்தான் சிராக்கை. மேலும், தொடர்ந்து சொன்ஞன்" நான், பாதுகாப்புக் கமிட்டியின் பிரதிநிதி ஐயா!"

"அதை முதலிலேயே சொன்னுல் என்ன? அநாவசியமாக என் நேரத்தை வீணுக்குகிருய். நான், கர்னல் விடால். ஆலந்தில், போராடிக்கொண்டிருக்கும் படைத்தளபதி... ......"

"அப்படியென்ருல், மிக்க மகிழ்ச்சி. தயவுசெய்து, தங்கள் அனுமதிச் சீட்டைத் தருகிறீர்களா?"

"எதற்காக உன்னிடம் காட்ட வேண்டும்? எல்லையில், காட்டிக் கொள்கிறேன் நான்!"

"உமக்கு, நாட்டின் சட்டம் தெரியும் என்று நினைக்கிறேன். பாதுகாப்புச் சட்டப்படி, நான் உம்மை எதுவேண்டுமானுலும் செய்யலாம், எடும் சீட்டை!"

சிராக்குக்கு சங்கடமாயிருந்தது! முணுமுணுத்துக்கொண்டே, அனுமதிச் சீடடை எடுத்து அந்த அதிகாரியின் முகத்துக்கருகே நீட்டினுன்!! அதே சமயத்தில், அவனுடைய மற்ருெரு கரம் கைத்துப்பாக்கியை அங்கெலுடைய மார்புக்கு நேராக வைத்துக்கொண்டிருந்தது. வண்டிக்குள் இருள் பரவியிருந்ததால், இதை அறிய முடியாது அந்த அதிகாரியால். ஆகவே, தான் அலறவோ அல்லது 'ஆபத்து!' என்று கூறவோ இயலாத நிலைமையில், தவித்தாள் அங்கெல். சாடைகாட்டக்கூட முடியாத நிலை.

இதற்குள், சிராக் நீட்டிய அனுமதிச் சீட்டைப் பிடுங்கி, பிரித்துப் பார்த்தான் அந்த அதிகாரி. இதற்குள், அவனைப்போலவே உடுத்திருந்த இன்னெரு அதிகாரி அவனருகேவந்தான். அவனும், அந்தச் சீட்டைக் கவனமாக நோக்கலானுன்.

"டாண்டன்...!" என்று கீழேபோடப்பட்டிருந்த கையெழுத்தைப் பார்த்ததும், அதிகாரிகள் இருவரும், உரத்த குரலில் "டாண்டன்!" என்று சொல்லினர். வண்டிக்குள்ளிருந்த சிராக்கை ஒரு முறைபார்த்துவிட்டு, மீண்டுமோர்முறை அந்த அனுமதிச்சீட்டை உற்றுப் பார்த்தனர்.

"ஆலந்து போர்முனையில் உயிரைத் திரணமென மதித்து தாய்நாட்டுக்காகப் போராடும் தளபதி விடால், நீர்தானே?"

சிராக், குரலைச் சரிப்படுத்திக் கொண்டு, வந்த ஆபத்து நீங்கிவிட்டதென்று எண்ணியவனுக 'ஆமாம்!' என்ருன் மகிழ்ச்சியுடன்.

"அப்படியானுல், இறங்கும் வண்டியை விட்டு!"

சிராக்குக்கு ஒன்றும் புரியவில்லை. குழப்பமடைந்தவனுய் "ஏன்?" என்று கேட்டான்.

"ஏனு?', என்று கேட்ட அந்த அதிகாரி, அனுமதிச் சீட்டை மடித்துத் தன்னுடைய பைக்குள் வைத்துக் கொண்டு, வண்டியின் கதவுகளை அகலத் திறந்தவண்ணம், "ஊம்...ஊம்... விடால்! இறங்கும் கீழே!!" என்ருன். குரலில், கடுமை தொனித்தது.

கதவு அகலத் திறக்கப்பட்டதும், அங்கெலுடைய பார்வையிலும் சிராக்குடைய பார்வையிலும் தெருமுனையில் நிறுத்தப்பட்டிருந்த ஆறு வீரர்கள் தென்பட்டார்கள். கரங்களில் துப்பாக்கியுடனிருந்த அவர்கள் அறுவரும் தேசியப் போலீஸ் படையைச் சேர்ந்தவர்கள்! அவர்களைக் கண்டதும், சிராக், திகிலடைந்தான். அங்கெல், திகைப்புற்ருள்.

"இறங்கி, எங்கே வரவேண்டும் நான்?"

"மிஸ்டர் விடால்! கேள்விக்கு நேரம் இதுவல்ல. இறங்கி, என்னுடன் வாரும்"

அதிகாரியின் குரலில் தொனித்த கடுமையைக் கண்ட சிராக் மிரண்டு போனுன். என்ருலும் தைரியத்தை இழக்காதவனுக, வண்டியைவிட்டுக் கீழே அடியெடுத்து வைத்தான். அப்போதும், அவனுடைய கரம் துப்பாக்கியேந்தியபடி அங்கெலுக்கு நேராகவே இருந்தது.

அவன் கீழே இறங்கியதும், இரண்டு அதிகாரிகளும், அவனுடைய இரு பக்கங்களிலும் வந்து நின்றுகொண்டனர். ஒருகையை ஒரு அதிகாரி பற்றிக்கொண்டான். வண்டிக்குள்ளிருந்த

இன்னொரு கரத்தை இழுத்து, அதிலிருந்த துப்பாக்கியைக் கைப்பற்றினுன் இன்னொரு அதிகாரி.

"இதென்ன அக்கிரமம்?" என்று கோபத்தோடு கேட்டான், சிராக்.

"கர்னல் விடால்! உம்மைக் கைது செய்கிறோம். மலர்ந்திருக்கும் புதுக் குடியரசின் பாதுகாப்புக் கைதியாக, உம்மைக் கைதுசெய்கிறோம்"

எப்படியிருக்கும் சிராக்குக்கு! என்ன பதில் சொல்லுவதென்றே, தெரியவில்லை. அதிகாரிகளை ஏறெடுத்துப் பார்த்தான்—அருகே துப்பாக்கி ஏந்தியவர்களாக நிறுத்தப்பட்டிருக்கும் ஆறுபேரையும் சுட்டுவிரலால் காட்டினர், அதிகாரிகள்! வண்டிக்குள் பார்த்தான், ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தவளாய்க் கிடந்தாலும் அங்கெலுக்கு, மகிழ்ச்சி பிறந்தது—வினை விதைத்தவன் வினை அறுக்கிருன் என்பதால்.

"ஐயர்! ஐயா!! நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன்... நான், விடால் அல்ல. நீங்கள் கைதுசெய்ய விரும்பும் விடால் அல்ல, நான்"

அலறினன், சிராக். உண்மையைச் சொன்னல், விட்டுவிடுவார்கள் என்கிற நம்பிக்கையுடன் தெரிவித்தான், அந்த அதிகாரிகளிடம்.

அவர்கள் எப்படி நம்புவார்கள்? சிராக்கின் பரபரப்பினைக்கண்ட ஒருவன் சிரித்தான்.

"விளக்கம் வேண்டாம் நண்பரே! நீர், விடாலா அல்லவா என்பது, இதோயிருக்கும் அனுமதிச் சீட்டிலுருந்து தெளிவாகத் தெரிகிறது; எங்களை, ஏமாற்ற முயற்சிக்காதீர். பலனில்லை"

"ஐயோ! அது, நான் திருடியது, ஐயா. என்னை நம்புங்களய்யா. நான் அல்ல விடால். வேண்டுமானுல் இதோ இருக்கும் இவளைக் கேளுங்கள்! இவளைக் கேளுங்கள்!!" என்று அங்கெலைச் சுட்டிக்காட்டினுன். "சொல், அங்கெல்! சொல்! நான் விடாலா? நானு விடால்?"

அவள், ஏன் சொல்லப்போகிருள்! வாய்மூடி மௌனியாகிய வண்ணம் அவன் படும்பாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள்!! கெடுமதியின் அறுவடை, நடந்து கொண்டிருந்தது, அங்கு. அவனைப் பார்த்து, புன்சிரிப் பொன்றை வீசிய வண்ணம், பேசாமலிருந்தாள் அந்தப் பெண்மான். என்ன செய்வான், அவன்? 'அட கடவுளே!', என்று தலையிலடித்துக் கொண்டான். சற்றுநேரத்துக்கு முன்புதான், கடவுளின் அருளுக்குரிய பாக்கியவான் என்று தன்னைப்பற்றி அங்கெலிடம் தெரிவித்துக்கொண்டிருந்தான். பக்தன் படும் பாடு கண்டு, 'அவர்' வரவில்லை அங்கு!

அதற்குள், ஆயுதம் தாங்கிய அந்த ஆறு போலீசாரும் அவனை வந்து சூழ்ந்துகொண்டனர்.

"கொண்டு செல்லுங்கள் சிறைக்கு" என்று கட்டளையிட்ட அந்த அதிகாரி அங்கெலின் பக்கம் திரும்பி, "மன்னிக்க வேண்டும், அம்மா. உங்களுடைய இன்பப் பிரயாணத்துக்கு இடையூருகயிருந்துவிட்டேன். என்ன செய்வது? வருத்தப்படாதீர்கள். திரும்பிச் செல்லுங்கள், வீட்டுக்கு" என்று கேலியாகச் சொன்னுன். அவன் அறிவானு, அந்த நேரத்தில், அங்கெலுடைய உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தது என்பதை? அவள், எந்தப்பதிலும் சொல்லாமலிருந்தாள். சிராக் பிரபுவோ, கண்களிலிருந்து நீர் வழிந்தவனுய் "அங்கெல், உன் ஆருயிர்க்காதலனை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றமாட்டாயா அங்கெல், உண்மையைச் சொல், அங்கெல்" என்று அலறினன்.

"நான், சிறைக்குச் செல்ல வேண்டியதுதானு, அங்கெல்?", என்று கதறினுன்.

அங்கெல், மகிழ்ச்சியுடன் அவன் பக்கம் திரும்பி, மிகவும் மன அமைதியுடன், "சென்று வாரும் கண்ணளா! மன மகிழ்ச்சியுடன் சென்று வாரும்", என்று பதிலளித்துவிட்டு, கதவுகளைச் சாத்திக் கொண்டாள்.

அதிகாரிகள் இருவரும் பேசிக் கொள்ளலாயினர்.

"என்ன ஆச்சரியம் பார்த்தாயா! கணவன் கைது செய்யப்பட்டது கண்டும், கலங்கவில்லையே அவள்..."

"அலுத்துப் போனவள் போலிருக்கிறது"

இருவரும், வாய் விட்டுச் சிரித்தனர். அந்த இடத்தை விட்டு, அகன்றனர். ஆனல், அங்கெல், வியப்பும்பதைப்பும் கொண்டவளாய் தன்னுடைய கணவனுக்கு வந்த ஆபத்திலிருந்து எப்படியோ தப்பி விடடோம், ஆனல், அவர் திரும்பி வந்ததும், இந்தப் பாரிஸ் பட்டணத்தை விட்டு எப்படிக் கடப்பது? அனுமதிச் சீட்டு எங்கே யென்று கேட்டால், என்னசொல்வது? ஐயோ இருளும்ஒளியும், ஒளியும்இருளுமாகயிருக்கிறதே இவ்வாழ்வு! ஆனந்தம் அரும்புகிறது; உடனே துக்கம் வந்து அலைமோதுகிறதே; இப்போது என்ன செய்வேன்? துயரம் எங்களைத் தொடருவதும், விடால் அகப்பட்டால் அவரைப்பிடித்துக்கொண்டுவர கட்டளையிட்டிருப்பதும் விளங்கிவிட்டதே தெளிவாக. சிறைக்கு சிராக்கைக் கொண்டுபோய் விசாரணை நடத்தி உண்மை வெளியாவதற்குள் விடாலும் நானும் தப்பிவிடவேண்டுமே, என்ன செய்யப்போகிறேன், நான்? என்ன செய்யப்போகிறேன், என்று ஏங்கலானுள்.

"என்னம்மா செய்வது இப்போது?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை ......"

"பாவம், உங்களைப் பார்த்தால் நல்லவர்கள்போல் தெரிகிறது......உங்களுக்கு இந்தக் கதி வரக்கூடாது..."

"எனக்கு வந்துள்ள கஷ்டத்தைப் பற்றி எப்படித் தெரியும் உனக்கு"

"இதென்னம்மா கேள்வி? கண்ணுக்கெதிராகப் பார்த்தேனே — உங்கள் கண்ணளனைப் போலீசார் பிடித்துக் கொண்டு போனதை"

"அவனை இழுத்துக்கொண்டு போனதுபற்றி எனக்குக் கவலையில்லை. அக்கிரமக்காரன். அவனுக்கு இந்த முடிவுதான் வரவேண்டும்......"

வண்டிக்காரன் இவளுக்கென்ன பைத்தியமோ, ஒருவேளை திடீர் ஏமாற்றத்தினுல் சித்தம் குழம்பிப் போய்விட்டாளோ என்று எண்ணினுன். அப்போதுதான் அங்கெலுக்குப் புரிந்தது, வண்டிக்காரன்கூடத் தன்னையும சிராக்கையும் கணவன் மனைவி என்று நினைத்கொண்டுள்ளான், என்பது.

அதுபற்றி விளக்கிக்கொண்டிருக்க இதுவா, நேரம்? அதனுல், வண்டிக்காரனை நோக்கி,

"வீண் விசாரணை உனக்கெதுக்கப்பா. விடு வண்டியை"

"எங்கேம்மா?"

"புறப்பட்ட இடத்துக்குத் திருப்பு"

## 7

நடுங்கும் கைகளுடன் கதவுகளைத் திறந்தாள் அங்கெல். எந்த வினுடியில் என்ன நேருமோ என்று துடித்துக்கொண்டிருந்தது அவளுடைய இதயம். வண்டிக்காரன், "போகட்டுமா?" என்றுன். "கொஞ்சநேரம் இங்கேயே இரய்யா" என்று கூறிவிட்டு, மாடிப்படிகளில் ஏறி, அறைக்குச் சென்றுள். கதவைத் திறந்து கொண்டு உள்ளேபோய் உட்கார்ந்த அவள் "விடால்கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லையே; விடால், நலமாக வந்து சேருவாரா?" என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தாள். நேரம் ஆக ஆக அவளுடைய உடல் நடுங்கலாயிற்று. ஓராயிரம் எண்ணங்கள் ஈட்டிபோல் வந்து தாக்கலாயின உள்ளத்தை. தூங்கும் இரவு, துக்கத்துக்கு மத்தளம் தட்டுவதுபோலிருந்தது. சோகபிம்பமாகயிருந்த துடியிடை

---

திருமணம்

காஞ்சீபுரம் ஆ. சி. கோவிந்தராஜ் எம்.ஏ., பி.எல்., அவர்களின் மகள் வத்சலா பி.ஏ., வீரராகவன் எம்.எஸ்.சி., ஆகியோரின் திருமணம் 26-1-56 அன்று தமிழர் முறையில் நடைபெற்றது.

யாள் சோபாவில் சாய்ந்தாள். தூக்கம், எப்படிக் கண்ணைத் தொத்தும்? எதுவுமே புரியவில்லை அங்கெலுக்கு. வெளியில் பரவிக்கிடந்த இருள் அவளுடைய வாழ்க்கையையும் கொஞ்சங் கொஞ்சமாக ஆக்கிரமிப்பதுபோல இருந்தது. முகத்தை மூடிக்கொண்டு, விசித்து விசித்து அழலானாள் அந்த வெண்மதியாள்.

"அங்கெல், இதென்ன கோலம்?"

என்ற குரல் கேட்டு நிமிர்ந்த அவளால் பேசவே முடியவில்லை. 'விடால்' என்று கூவிய வண்ணம் அவனுடைய தோளில் போய்த் தொத்திக்கொண்டாள். விடால், அதிகம் பேசவில்லை. மிகவும் பரபரப்படைந்தவனுயிருந்தான்.

"விடால், உங்களைக் காணவில்லையென்றதும் பயந்துபோய்விட்டேன்.."

விடாலுக்கு என்ன தெரியும் அவன் சென்ற பிறகு நடந்த நிகழ்ச்சிகள்? அதனுல், "பைத்யமடி நீ," என்று அவள் முதுகில் தட்டிக்கொடுத்தவனுக, "கிளம்பு, கிளம்பு, நேரமாகி விடபோகிறது..." என்று அவசரப் படுத்தினுன்.

"ஒரே ஒரு நிமிஷம் விடால், உங்களிடம் சொல்ல வேண்டிய முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது..."

"என்ன அங்கெல்...?"

"நாம் அறையைவிட்டு எங்குமே போகக்கூடாது...பாரிசை விட்டு நாம் வெளியேற முடியாது.......வெளியேற முடியாது விடால், வெளியேற முடியாது..."

"வெளியேற முடியாதா, ஏன் முடியாது."

"ஏனென்ருல்..."

கூறக்கூட அவன் அவகாசம் தரவில்லை, அறையைச் சற்றுமுற்றும் பார்த்தவனுய், "எங்கே சிராக்பிரபு?" என்று கேட்டான்.

"அதைத்தான் சொல்ல வந்தேன் சிராக்...அவன்...அவன்..."

"அவன்"

"என்னை மன்னிக்க வேண்டும் விடால், என்னை மன்னித்துவிடுங்கள் ......"

விம்மிவிம்மி அழுத வண்ணம் தன்னுடைய காலிலே விழுந்த தன் கண்மணியாளை வாரிஎடுத்துத் தூக்கினுன் விடால்.

"கண்ணே, என்ன நடந்தது இங்கு ...?"

"உங்களுடைய உடைகளைப் போட்டுக்கொண்டு அதோடு நீங்கள் வாங்கி வந்த அனுமதிச் சீட்டையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்..."

"என்ன?"

"என்னுல் முடிந்தவரை முயற்சித்தேன் விடால்,.....முடியவில்லை அவனுேடுகூடப் போனேன். முடியவில்லை..."

விடாலின் குரல் தடித்தது. "அங்கெல்! என்ன நடந்தது என்று சொல் ...........அழுவதைப் பிறகுவைத்துக் கொள்ளலாம். விஷயத்தை இரண்டொரு வார்த்தைகளில் விளக்கு"

சொன்னுள், அந்தச் சுந்தரவல்லி.

ஒரு நிமிடம், பேசாமல் நின்ருன் விடால். பிறகு வாய்விட்டுச் சிரித்தான்......சிரித்தான்........சிரித்துக் பகாண்டே சொன்னுன்.

"சரியான அறுவடை!"

அங்கெலுக்கு எதுவும் புரியவில்லை. கணவனின் மகிழ்ச்சியைக் கண்டு மருண்டாள். "இப்போது என்ன செய்வது விடால்? நம்முடைய கதி என்ன ஆவது? அனுமதிச் சீட்டு போலீசாரிடம் அல்லவா சிக்கிக் கொண்டது..."

"நாளைக் காலையில் அந்த அனுமதிச்சீட்டு அவனைத் தூக்குமேடைக்கு அளிக்கப்பட்ட நுழைவுச் சீட்டாக மாறிவிடும். அவன் தூக்கிலேற்றப் பட்டுவிடுவான்!"

"அந்த ஆனந்தத்தில் நமக்கேற்பட்டிருக்கும் ஆபத்தை மறந்துவிட்டீர்களே விடால்..."

"மறக்கவில்லை அங்கெல்; மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது எனக்கு...என்னைக் கைது செய்யுமாறு பாரிசின் ஒவ்வொரு எல்லையிலும் ஜெஸ்டினுடைய கையாட்கள் நிறுத்தப்பட்டிருக்கிருர்கள் என்கிற செய்தியைக் கூறவே டாண்டன் கூப்பிட்டனுப்பினர்...... நல்லவேளை, நமக்கு வந்த ஆபத்து சிராக்கோடு போய்விட்டது."

"எப்படி?"

"கர்னல் விடால் அகப்பட்டுவிட்டான் என்கிற தகவல் இந்நேரம் பரவியிருக்கும். காவலிருப்போர் எல்லாம் அந்த மகிழ்ச்சியில் திரும்பி விடுவார்கள்.........நாம் பயம் எதுவுமின்றிப் பாரிசைவிட்டு வெளியேறி விடலாம்."

"வெளியேற வழி?"

"இதோ" என்று இன்னொரு அனுமதிச் சீட்டை எடுத்துக் காட்டினுன் விடால். "டாண்டன் கொடுந்தார்... மாற்றுப் பெயரிலிருக்கிறது இந்த அனுமதிச் சீட்டு. ஊம்...புறப்படு, புறப்படு"

ஆனந்தப் புருவானுள் அங்கெல். சில வினுடிகளுக்கெல்லாம் மூட்டை முடிச்சுகளுடன் இருவரும் கீழே இறங்கி, வண்டியில் வந்து அமர்ந்தனர்.

வண்டியை விடச் சொன்னுன் விடால். வண்டிக்காரன் குழப்பத்தோடு அங்கெலைப் பார்த்தவனுக "பாரிஸ் மிகவும் கெட்டுவிட்டது" என்று முணுமுணுத்தவண்ணம் ஓட்டலானுன். உள்ளே, ஆனந்தமாக அங்கெலும் விடாலும் பேசிக்கொண்டு கிடந்தனர். திடீரென, ஓடிய வண்டி நின்றது. அங்கெல் திடுக்கிட்டாள்.

"யார், வண்டிக்குள்?" என்று கேட்டவண்ணம் ஒரு அதிகாரி வந்தான்.

"டனேயர் போகிறேன், அவசர சர்க்கார் அலுவலாக" என்று பதிலளித்தான், விடால்.

"அனுமதிச் சீட்டு..."

"இதோ" என்று எடுத்து நீட்டினுன், விடால். அதிகாரி உரத்த குரலோடு படித்தான்; "அவசர அரசாங்க வேலையாகத் தனது மனைவியுடனும் காரியதரிசியுடனும் செல்லும் டனேயரை வெளியே செல்ல அனுமதிக்கவும்" என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்து முடித்த அதிகாரி வண்டிக்குள் பார்த்தான். அங்கே இருவர்தான் இருந்தனர். அனுமதிச் சீட்டு மூவருக்கல்லவா.

"உங்கள் காரியதரிசி, வரவில்லையா?"

"பாரிசிலேயே இருக்கவேண்டும் என்று சர்க்கார் விரும்பியதால் வரவில்லை..."

"சரி போங்கள்!" என்று அனுமதிச் சீட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, வணங்கினுன் அந்த அதிகாரி.

வண்டி ஓடிற்று.

"அது யார் விடால், உங்கள் காரியதரிசி?"

"சிராக்தான் அங்கெல்!"

"அவனு...?"

"ஆமாம் — அவனைக் காப்பாற்றிவிடலாம் என்று அனுமதி வாங்கினேன்....-கெடுமதியாளன் கொடுத்து வைக்கவில்லை அனுபவிக்க."

விடால், அங்கெலைக் கூர்ந்து பார்த்தவனுகக் குனிந்தான். அவளும் தலைநிமிர்ந்தாள். நான்கு உதடுகள் சந்தித்துக் கொண்டன. வண்டி, அசைந்து அசைந்து ஓடியது அவர்களுக்கு மிகவும் சவுகரியமாயிருந்தது. ஆனந்தத்தோடு அவன் மடியில் சாய்ந்தாள் அங்கெல்.

திரும்பிப்பார்த்தான் வண்டிக்காரன் 'செச்சே' என்று கண்களை மூடிக் கொண்டு, குதிரையைத் தட்டினுன். ஆனந்த யாத்திரை ஆரம்பமாயிற்று.

[முடிந்தது]

---

### பிறப்பு

நாஞ்சில் மாவட்ட மார்த்தாண்டம் திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ். குமரேசனின் சகோதரி தோழியர் கோலம்மாள், வேலப்பனுக்கு 5—2—56 அன்று ஓர் ஆண்மகவு பிறந்துள்ளது. தாயும், சேயும் நலம்.

# கேலிப் பொருளாகிறார்!

*கேலிசெய்யப்படுகிறார்! உல்லாச உரையாற்றுபவர் என்று எள்ளி நகையாடப்படுகிறார்!*

*இரண்டொரு திங்களுக்கு முன்பு 'இவரைப்போலொரு அறிஞர் உண்டா?' என்று புகழ்ந்தவாயே, இன்று ஏளனம் செய்கிறது; ஏதேதோ பேசுகிறது!*

*"இந்திய உபகண்டத்தை மொழிவாரி அடிப்படையில் சீரமைக்க வேண்டுமல்லவா?" — "ஆமாம்!" "அதற்கொரு கமிஷன் நியமிப்போமா?" — "அவசியம் நியமிப்போம்"—"அக்கமிஷனில் மிகமிகப் பெரியவர்களே இருக்கவேண்டும்" —"ஆமாமாம்! அப்படித்தானிருக்க வேண்டும்!"—என்றெல்லாம் பேசப்பட்டு பிறகு, யாருக்கு இடமளிக்கப்பட்டதோ அவர்தான் இவ்வளவு எளிதில் ஏளனம் செய்யப்படுகிறார்.*

**ஏதோ பேசுகிறார்!** **அவர் பேசுவதைப் பற்றியெல்லாம், எதற்காக நாம் அக்கரை கொள்ளவேண்டும்?**—*என்று கேட்கப்படுகிறது, காரசாரமாக.*

*கேட்பவர் நேரு பண்டிதர்!*

*அமிருதசரஸ் மாநாட்டிலே பேசிய காங்கிரஸ் காரர் ஒருவர், புதுடில்லி 'ரோடரி கிளப்'பிலே* **சர்தார் கே. எம். பணிக்கர்** *பேசிய பேச்சொன்றினைக் குறிப்பிட்டாராம் உடனே கோபம் வந்துவிட்டது, நேருபண்டிதருக்கு; ஏளனம் செய்கிறார் பணிக்கரை—இங்கெதற்கு அவர் பேச்சு? என்கிறார்—'ரோடரி' கிளப்பிலே பேசுபவர்தானே எனக் கேலிசெய்கிறார்.*

*நேருவுக்குச் சீற்றம் கிளம்புகிற அளவுக்கு, பணிக்கர், திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறிவிடவில்லை. எந்தக் காரியத்துக்காக, தன்னை அழைத்து, இன்னும் இருவரையும் 'உறுப்பினர்களாகப் போட்டு, கமிஷன் ஒன்று அமைத்து, அதற்கெனக் காசையும் செலவிட்டனரோ, அதைப் பற்றி எடுத்துரைத்திருக்கிறார் அங்கே; உடனே இவருக்குக் கோபம் வந்துவிட்டது.*

**"இந்தியாவை, மொழிவாரியாகப் பிரித்துச் சீரமைக்காவிடில், ஐக்கியம் குலைந்துவிடும். இரண்டு மூன்று மொழிகளைப் போட்டு அடைத்து ஒரே ராஜ்யமாக்குவது நல்லதல்ல"** *இதுதான், பணிக்கர் பேசியது. இதை இரண்டு திங்களுக்கு முன் நேருபண்டிதரும், ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை. ஆனால், இன்று—இது கேலிக் குரியதாகிறது — 'ரோடரிகிளப்'பில் பேச இலாயக்குடையதே தவிர, கவனத்துக்குரியது அல்ல என்கிறார்.*

*மொழிவாரியாக 'ராஜ்யங்களை' அமைப்பது, கேலியாகப்படுகிறது பண்டிதருக்கு! இந்தக் காரியத்தைச் செய்யவே, பணிக்கர், பணிக்கப்பட்டார், அன்று!*

*ஆண்டு ஒன்றுகூட ஆகவில்லை, அவர்கள் முடிவு வெளிவந்து. அதற்குள் 'கமிஷன் அறிக்கை' குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டு, புதுத் தீர்மானம் வந்துவிட்டது!* **கூட்டுமொழி அரசுகள் அமைக்கப்படுமாம்- அத்யாவசியமான இடங்களில் ஒருமொழி அரசுகளும் நிறுவப்படுமாம்!**

*அடிப்பவனுக்காக மிரளுவோம். மிரள்பவனை இழுத்துப்போட்டு உதைப்போம்!—என்பதற்கும், அமிருதசரசில் மேற்கண்ட படி, நேரு பண்டிதர் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதற்கும் வித்தியாசம் இல்லை.*

*ஆந்திரா பிரிந்துபோய்விட்டதே மொழியின் அடிப்படையில்?—என்று யாராவ்து கேட்டால், பதிலிருக்கிறது, அத்தீர்மானத்தில்! தட்சிணபிரதேச அமைப்பு வேண்டாம்—என்று யாராவது காங்கிரஸ் காரர்கள் கூறினால், அதற்கும் தக்க விடையிருககிறது, தீர்மானத்தில்!*

*ஓங்கி வளர்ந்த கம்பம், எதற்கும் அஞ்சாது, வளையோம் நாங்கள், முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைத்ததில்லை— எனறெல்லாம் விருதுகளைப் பாடுவார்கள், காங்கிரஸ்காரர்கள். ஆனால் இன்று காங்கிரஸ், வளைந்துகொடுத்துத் தீர்மானம் நிறைவேற்றுகிறது—வம்பு எதுவும் வந்துவிடுமோ என்கிற அச்சத்துடனேயே, அக்கம் பக்கம் யோசித்து, திட்டங்களை வெளியிடவேண்டிய நிலைமைக்கு வந்துள்ளது.*

*

**"முப்பது ஆண்டுகளாக மொழிவாரி மாகாணப் பிரிவினையை ஆதரித்து வந்துள்ளீர்களே, நீங்கள்?"**

**"ஆமாம்! அதனாலென்ன, அப்போது செய்த முடிவு என்பதற்காக இப்போது மாற்றிக்கொண்டால் என்ன? காலம், நிலைமைகளை அனுசரித்து தேசத்தை இழுத்துச் செல்வதுதானே முக்கியம்!"**

*

*சாயங்களுக்கேற்றபடி மாற்றிக் கொண்டால் என்ன, என்று கேட்கிறார்கள் காங்கிரசுத் தலைவர்கள்! முப்பது ஆண்டுகளாக மொழிந்து வந்த மொழிவாரிப் பிரிவினை, இப்போது கசக்க ஆரம்பித்துவிட்டது – அதுபற்றி வாதாடுவதற்காகவும், எல்லைகளைச் சீரமைக்கவும், நியமிக்கப்பட்ட பணிக்கர் கேலிப் பொருளாகிறார்!*

*அவர் பேசுவது, 'ரோடரி கிளப்' பிரசங்கமாம்—அதற்கு, காங்கிரஸ்*

## கேள்வியும்—பதிலும்

**கே:-** காங்கிரஸ் சர்க்கார் நடத்தி வரும், ஆறுகளின் அணை, தேக்க, திட்டங்கள், எதைத் காட்டுகின்றன?

**ப:-** பூஜை செய்யும் பழைய வழக்கத்தை, தற்கால பிராமணர்களான, நேருவும், தேஷ்முக்கும் விட்டுவிடவில்லை, என்பதைத்தான் காட்டுகிறது!

பந்தலில் என்னவேலை, என்கிருர் நேரு.

இந்தப்புத்தி, அன்றன்றே இருந்திருக்கவேண்டும் — ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி அழித்து இப்படியொரு கமிஷனை நியமித்த அன்றன்றே இந்த விவேகம் இருந்திருக்க வேண்டும்? 'ரோடரி' கிளப் சீமான்களிடம் நாட்டுப் பிரச்னையை ஏன் ஒப்படைத்தார் இவர்?

அவர்கள் திட்டம் தீட்டிக் காட்டியபோது 'சபாஷ்' என்று பாராட்டிவிட்டு, இப்போது பம்பாய் உதைக்கிறது—ஒரிஸ்ஸா அடிக்கிறது என்றதும் ஒளிய இடம் உண்டா, முக்காடு போட்டுக் கொள்ள வேறேதேனும் திட்டமுண்டா என்று தேடியலைகிருர் நேரு! அதனுல் அவரைக் கண்டிக்க முன்வருகிருர்!!

தன் விருப்பத்துக்கேற்ப தலையசைத்தபோது, சர்தார் பணிக்கர், பண்டிதரின் கண்களுக்குப் பேரறிஞராகத் தெரிந்தார் — அவரது உரை அரியதோர் கருத்து விளக்கமாகக் காட்சியளித்தது— ஆனுல், சிறிது மாறுபட்டதும், அது 'ரோடரிகிளப்' பேச்சாகத் தெரிகிறது! மக்களுக்குத் தேவையற்றது, என்று தெரிவிக்கப்படுகிறது!

இப்படி மாதத்துக்கோர் திருப்பம்—நிமிடத்துக்கொரு விளக்கம்—நேரு பண்டிதருக்கு வெகு சகஜமாகிவிட்டது, இந்த S. R. C. தீர்ப்பின் முடிவுகளில்.

முதலில் S. R. C. அறிக்கையின் அடிப்படையிலே நடக்கும் என்ருர்.

கமிஷனின் அறிக்கையிலிருந்த ஏறுமாறுகளை ஒவ்வொருவரும் எடுத்துரைத்து, தத்தமது பகுதிகளுக்கு நீதிவேண்டும் என்று கோரலாயினர்—நேருவின் குரலில் தெளிவு இல்லை; திமிர் இருந்தது —அதனுல் 'பம்பாய்' ஏற்படும் அறிகுறி தெரிந்தது.

உடனே 'மேலிடம்' தீர்ப்பு அளிக்கும் என்று சொல்லி S. R. C. அறிக்கை வீசி எறியப்பட்டது.

தீர்ப்பு அநீதி நிரம்பியதாக இருந்ததால் மராட்டியர் கொதித்தெழுந்தனர்; பம்பாய் மாநகரை, மத்திய பீடத்துக்கு அளிக்கமாட்டோம் — மராட்டியத்தின் தலைநகராக அது விளங்கட்டும் என்று முழக்கமிட்டனர். நேரு, செவி சாய்க்கவில்லை; 74-பிணங்கள் விழுந்தன—2000-பேர் கைதுசெய்யப்பட்டார்கள்— ரணகளமாயிற்று, பம்பாய் நகரம்.

உடனே, நேருபண்டிதர் அறிவித்தார் பிரதேச கவுன்சில்கள் என்பதாக ஒன்று அமைக்கும் யோசனை இருப்பதாக.

அதையும், எவரும் மதிக்கவில்லை. ஆர்வம்கொண்ட மக்களின் முழக்கமெல்லாம், எமது மொழி வாழ ஒரு அரசு வேண்டும் என்பதாகவே இருக்கிறது! அதனுல், தன்னுடைய சகாக்களான பி. சி. ராய், நாராயண் ஆகிய வங்கபீகார் அமைச்சர்களைவிட்டு, 'ஒரு கூட்டரசு' அறிக்கைவிடச் சொன்னுர்.

இப்போது, அப்படி இரண்டு மூன்று ராஜ்யங்கள் அமைவதையே, தான் விரும்புவதாகப் பறைசாற்றுகிருர்.

இப்படி, அடிக்கடி மாறிக் கொண்டிருக்கின்றது, புத்தி! ஏனெனில், எப்படி இந்திய உபகண்டத்தின் மொழிவாரி மாகாணங்களுக்கு நீதி வழங்கலாம் என்கிற ஆர்வம் குறைந்து போய் அவசரமும், வெறியுமே பிடித்தாட்ட ஆரம்பித்துவிட்டது!!

அதற்கு நேருசொல்லும் காரணம், "இந்தியாவின் ஐக்கியத்துக்கு இப்படிப் பெரிய ராஜ்யங்களே இருக்கவேண்டும்", என்பதுதான்.

ஆனுல், நேருவால் மதிக்கப் பெற்றபணிக்கரோ, "இப்படி பெரிய ராஜ்யங்களிருப்பதற்குப் பதில் மொழிவாரி அரசுகள் அமைவதுதான் இந்தியாவின் ஐக்கியத்துக்கு நல்லது", என்கிருர்.

ஒத்துக்கு மத்தளம் தட்டவில்லையென்றதும் கோபம் வருகிறது பண்டிதருக்கு! உடனே, பணிக்கரை 'ரோடரிகிளப்' வாசியாக்கி, கேலியும் கிண்டலும் செய்கிருர்!!

பணிக்கர்—எவ்வளவு பாராட்டுக்களைப் பெற்ருர், இதே நேருவால். இன்று, எவ்வளவு எளிதில் அவருடைய பேச்சினைத்துச்சமாகக் கருதுகிருர்.

'ரோடரிகிளப், பில் பேசினுராம்' பணிக்கர்! பேசினுல் என்ன? ரோடரிகிளப்பில், மூக்குபேசும்! காங்கிரஸ் மாநாட்டில் கண்கள் பேசும்!—என்று ஏதாவது இருக்கிறதா! அல்லது இங்கே ஆணுகயிருப்பவர் அங்கே பெண்ணுக மாறிவிடுவாரோ!!

ரோடரி கிளப்பில் பேசினுல்—என்ன! அது ஒன்றும் இங்கிலாந்திலிருக்கும் சங்கம் அல்லவே—பண்டிதரின் 'பாரத'த்திலிருப்பதுதானே!

பேசப்பட்ட பொருள் குறித்து விவாதிப்பது விவேகிகளுக்கு அழகா, அல்லது 'ரோடரிகிளப்' பேசசுத்தானே என்று எள்ளி நகையாடுவது அறிவுடைமையா? ஒரு பெரியவர் — நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தகுதிவாய்ந்தவர் எனக் கருதப்பட்டவர்—வெளியிடும் கருத்துக்கு, அளிக்கப்படும் மரியாதை இதுதானு!!

'வேண்டியவன்' என்ருல் அவனை உத்தமன், உதாரன், விவேகி, சகல கலா வல்லவன் என்று தட்டிக்கொடுக்கவேண்டியது. சிறிது மாறுபாடான கருத்துக்கொண்டு விட்டால், உடனே அவனை எள்ளி நகையாடி எடுத்தெறியவேண்டியது. என்னே, விந்தையான இயல்பு! ஜனநாயகத்துக்கு தரப்படும் மதிப்புதான் என்னே!

இப்படிப்பட்ட நேருவையும் நம்பி, அவருக்கு 'ஜாலரா' தட்டி, பிறகு எனத்துக்கும் கேலிக்கும் ஆளாகும் பணிக்கர்களைப் பார்க்கும்போது உண்மையில் பரிதாபமாக இருக்கிறது, நமக்கு. ஏனெனில் இந்தப் பணிக்கர்தான், அடிக்கடி இந்திய ஒற்றுமை — இந்தியின் அவசியம் இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசி, நேருவின் தயவைப் பெற முயன்று வருகிருர்! அவருக்கே, இக்கதி!

பணிக்கருக்கு கிடைக்கும் பரிசு, மற்றவர்களின் கண்களையாவது திறந்தால் நல்லது.

★


## ஓயமாட்டோம்!

[வழித்துணை ராமன்]

★

வடக்கிருந்து கொண்டிங்கு தமிழன் தன்னை
வாய்க்குவந்த படிபேசும் நேரு மற்றும்
திடநெஞ்சக்காரருக்குச் சொல்வோம்உங்கள்
தட்சிணத்து அவியலுக்கு எங்கள் நெஞ்சில்
கிடக்கின்ற எண்ணத்தை வெளியே காட்டக்
குறிப்பிட்டோம் பெப்ருவரி இருபதாம்நாள்
அடக்குமுறை ஆனதென்ற ஐம்பத் தாறை
ஆக்காதீர் அதற்கெல்லாம் ஓயமாட்டோம்!

RAMAMOORTHY.



# கோயில்கள்

ஏ. ஆர். அழகப்பன்

★

**நல்ல காரியங்**களுக்குக் கோயில்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றல்ல; அந்தக் காலத்தில்!! சுயஆட்சி நிறுவப்பெற்ற அக்காலத்திலே, தமிழ்நாட்டு ஊர்களிலுள்ள ஆட்சிக் குழுக்களெல்லாம், ஊர் அலுவல்களை ஆற்றுவதற்கு, கோயிலின் கண்ணுள்ள மண்டபம் ஒன்றையே பயன்படுத்திக் கொண்டனராம் — ஊரைப் பொறுத்த குழுவினரின் திட்டங்களெல்லாம், கோயில் சுவர்களிலேயே பொறிக்கப்பட்டனவாம் —கல்வி, கலை, இவை இரண்டும் உச்சநிலையை அடைந்தது என்று கூடக் கூறலாம். உளக் கண்ணால் சோழர் காலக் கோயிலொன்றை நோக்கின், ஒரு பக்கம் ஊர்க் குழுவினரின் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்; மற்றொரு பக்கம நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள்—மாணவர்கள் சேர்ந்து உரையாடிக் கொண்டிருப்பார்கள்; இன்னொரு புறம் ஆடலும் பாடலும் அழகுற நடைபெறும். இந்த முறையிலே கோயில்கள், ஆட்சி மன்றமாக—கல்வி நிலையமாக—கலைபயில் நிலையமாக—விளங்கும். இவை அத்தனையும் கல்வெட்டுக்கள் தரும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

திருபுவனம், எண்ணாயிரம், திருமுக்கூடல் ஆகிய இடங்களிலே பல்கலைக் கழகங்கள் இருந்தனவாம். அத்தனையும் அரசரால் நிறுவப்பட்டதாம்; போற்றப்பட்டதாம். அங்கே மாணவர்களுக்கு வேண்டிய உணவும் உறையுளும் அளிக்கப்பட்டதாம். அத்துடன்கூட அல்ல, தலைமுழுக்குக்கு எண்ணெயும், விளக்குக்கு எண்ணெயும் தரப்பட்டதாம். யாரால்? அரசியலாரால்! மக்களிலே கல்வியறிவு அற்றோருக்கு, கேள்வியறிவு பெருகும் வண்ணம், சில நூல்கள் கோயிலிலே படித்துக்காட்டப்பட்டதாம், அதற்கென்று ஒரு மண்டபம்கூட இருந்ததாம். இலக்கணம் கூட எடுத்தியம்பப்பட்டதாம். அப்படிச் சொல்லுபவர்களுக்கு, அரசியலார், வரியில்லாமல் நிலம் கொடுத்தார்களாம். ஏன்? கோயில் மருத்துவ விடுதியாகக்கூடப் பயன்பட்டிருக்கிறது. யாருக்கு?—கல்வி பயிலும் மாணவர்களுக்கு — ஊரிலே உள்ள பொதுமக்களுக்கு. மருத்துவ மனைக்கு வேண்டிய மருந்துகள், மருத்துவன், ஒரு செல்லியக்கிரியை பண்ணுவான் (Surgeon) ஆகியோர் இருந்தனர் என்று அறியக் கிடக்கிறது. நோயாளிகளுக்குத் துணையாக மருத்துவப் பணி மகளிர் பலர்கூட இருந்தனராம், இயல், இசை, நாடகங்கள் வளர்ந்திருக்கின்றன, அன்றைய ஆலயங்களிலே. பெரிய கோயில்களிலே, 'கூத்து மண்டபம்' என்று ஒரு மண்டபமே தனியாக இருந்ததாம், மக்களை நல்வழிப்படுத்த நாடகங்கள் நடித்தனராம். அவை, பண்டைய முறைப்படி, சாக்கைக் கூத்து, சாந்திக்கூத்து, அகமார்க்கம் என அழைக்கப்பட்டிருக்கிறது —கல்வெட்டு சொல்கிறது. பண் இசைத்தார்களாம். பல்வகை வாத்தியங்கள் மீட்டினார்களாம். இப்படி நல்ல நல்ல காரியங்களுக்கு பயன்பட்டிருக்கின்றன— அக்காலத்திலே கோயில்கள்.

ஆனால், இன்று...

ஆட்சி மன்றங்களாகப் பயன்பட்ட ஆலயங்கள் இன்று ஆணவக்காரர்களின் இருப்பிடமாகப் பட்டிருக்கிறது. ஊரின் அலுவல்களை ஆற்றுவதற்குப் பயன்பட்ட கோயில்கள் இன்று ஒருசாராரின் உடைமையாக்கப்பட்டிருக்கிறது. 'கல்வி' வளர்ந்த அந்தக் கலைக் கோயில்களிலே 'கலவிகள்' நடைபெறுகின்றன. கலையை வளர்த்த அந்த ஆலயங்கள் இன்று சூதாட்டக்காரர்களின் சொக்கட்டானாகி விட்டது. ஆடலும் பாடலும் நடைபெற்ற அந்த அழகு இடங்களிலே புல்லும், காளானும், கத்தாழையும், போட்டிபோட்டுக்கொண்டு வளருகின்றன. வியாதியைப் போக்க மருத்துவ மனையாகப் பயன்பட்ட அந்த மகேசன் இருப்பிடம் இன்று வியாதியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. பல்கலைக் கழகங்களாக பயன்பட்டது, இன்று 'பாராயணம்' படிக்கும் இடமாகிவிட்டது. 'கல்வி' கற்றுக் கொடுத்த அந்த இடம் இன்று 'ஏதேதோ' கற்றுக் கொடுக்கிறது! நல்ல நாடகங்களை நடத்தி நாட்டு மக்களை நல்வழிப் படுத்திய அந்த இடம் இன்று 'நச்சுப் பாம்பு' நடனமாடும் நர்த்தன புரியாகிவிட்டது.

> அறிவுச் சாலையாகவும் பயன்பட்டதுண்டு, அன்று. இன்றோ, மூடத் திருவிழாவுக்கு மட்டுமே பயன்படுகிறது!

19 கோயில்களில் கிட்டத்தட்ட 50 இலட்சம்! நகைகள் மட்டும்! கால் நடைகள்! வயல்கள்! தோட்டங்கள்! இடங்கள், இதுவேறு கணக்கு! சுரண்டி எடுத்துச் செல்லப்பட்டவைகளில் மீதித் தொகை இது! மதுரை, திருச்செந்தூர், ஸ்ரீ ரங்கம், திருவாரூர். வைத்தீஸ்வரன் கோயில் இராமேசுவரம், திருவையாறு போன்றவைகள் சேர்க்கப்படாமல் சாதாரண கோயில்களின் நகை மட்டுமே மேலே தரப்பட்டிருக்கின்றன.

நாட்டுக் கோட்டை செட்டியார் பகுதியில் உள்ள கோயில்களும் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மதுரை மீனாட்சியின் நகை-யாராலும் மதிப்பிடமுடியாது என்பது அறிந்ததே! மேலே தந்த கோயில்களின் எண்ணிக்கை பத்தொன்பதுதான் — ஆனால் தமிழ்நாட்டுக் கோயிலின் எண்ணிக்கையும் அதன் சொந்தங்களும் கீழே

| | |
|---|---|
| பெரிய கோயில்கள் | 12925 |
| பெரிய மடங்கள் | 218 |
| தர்ம நிலையங்கள் | 668 |
| சிறு தர்ம நிலையங்கள் | 16295 |

(இவைகளைச் சார்ந்த நிலங்கள் கிட்டத்தட்ட 8 இலட்சம் ஏக்கராகும்)

இவ்வளவும்—பயன்படாமல்—உபயோகப்படாமல்—உதவாக்கரையாக—மலைபோல் குவிந்து கொட்டிக்கிடக்கிறது! கேட்பாரற்று! கேட்கக் கூடிய அரசாங்கம் ஏற்படாததால்—நாட்டிலே இல்லாமை கொடுமை, வறுமை அதை எடுத்துச் சொன்னால் பொல்லாதவன், நாத்திகன்.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்'

'வேண்டுதல் வேண்டாமை இலான்
அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'

படிக்கிறார்கள், குறள்! படித்துக் கொண்டிருக்கிறார்கள்! பயன்? பலன்?

★

# கனவு பலிக்காது!

சின்னாட்களுக்கு முன்னால் சி. பி. இராமசாமியார் திட்டமொன்றை வெளியிட்டார்.

சிதறுண்டு கிடக்கும் இந்தியாவை இணைக்க இதனினும் மார்க்கம் வேறெதுவுமில்லை. கங்கையையும் காவிரியையும் இணைக்கவேண்டும். இந்தியா முழுமையும், ஆறுகளாலும், வாய்க்கால்களாலும் ஒற்றுமையை உண்டுபண்ண வேண்டும் என்பதாக.

யோசனை, புதிதல்ல; எத்தனையோ ஆண்டுகளுக்குமுன்பே நான் வெளியிட்டது என்றார். அத்தனை ஆண்டுகளாகியும் அது சீந்துவாரற்றுக் கிடப்பதிலிருந்தே செத்துவிட்டது; அதை ஏன் சிந்திக்கவேண்டும் என்று கருதலானோம்.

இப்போது ஒருவர், இன்னொரு 'அரிய யோசனை'யை வெளியிடுகிறார். இவரும் அற்பசொற்பமானவரல்ல—அகில 'பாரத'த்தின் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியாக இருந்தவர். திருவாளர் மெகர்சந்த் மகஜன் என்பார், இரண்டொரு தினங்களாக 'இந்து' இதழில் தீட்டும் கட்டுரையொன்றில் புதியதோர் திட்டத்தை புகுத்துகிறார்.

சி. பி. யாவது, ஆறுகளோடும் வாய்க்கால்களோடும் நின்றார்; இந்தச் சிந்தனையாளர் சட்டசபைகள் யாவையும் அழித்துவிட்டு, தனித்தனி மந்திரிசபை அமைப்புகள் எதுவும் இல்லாது, 'ஏக இந்தியா'வை உருவாக்கலாம் என்கிறார்.

*

"இந்தியா, ஒன்றாக இருந்தது என்று சரித்திரததில் ஆதாரம் காட்டமுடியுமோ?"

"எப்படி இயலும்? மகாபாரத, இராமாயண காலததில்கூட இந்தியா ஒன்றாக இருந்ததில்லையே! அன்பு மார்க்கம் கண்ட அசோகன் காலத்தில்கூட, அதைச் சாதிக்க முடியவில்லை. அக்பர்கூட முயன்று தோல்வி கண்டிருக்கிறார்"

"இந்தியா முழுமைக்கும், ஒரே மாதிரியான அரசியல் அமைப்புகளாவது இருந்ததுண்டா?"

"இல்லை; கிடையாது. அசுவமேத யாகம் செய்த அரசர்கள் காலத்திலும் சரி, திக்கெல்லாம் வென்ற ஜெயவீர ராமன் ஆண்ட போதுஞ் சரி, என்றும் அப்படியொரு அமைப்பு இருந்ததில்லை"

"பிறகு, எப்போது ஏற்பட்டது?"

"பிரதம நீதிபதியான எனக்கா தெரியாது? வெள்ளைக்காரன் காலத்தில்தான், ஒரே விதமான அரசியல் – 1857ல் விக்டோரியா ராணி வெளியிட்ட பிரகடனத்தின்படி—உருவாயிற்று"

*

வெள்ளையன்தான் இந்திய பூபாகத்தில் ஏகஆட்சியை நிறுவியவன்; அதற்குமுன் ஒருபோதும் இந்தியா ஒரேநாடாக இருந்ததில்லை என்கிற உண்மையை மகஜன் மறுக்கவில்லை!

என்றாலும், இந்த யோசனையைக் கூறுகிறார்—இந்திய அரசியலமைப்புத் திருத்தப்பட வேண்டுமாம்; அது வெள்ளைக்காரன் உண்டாக்கிய இந்தியச் சட்டத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதாம்; அவன் வெளியேறிவிட்டபின்னும் அவனைப்போல, ஏக இந்தியாவையும் கட்டியாள வேண்டுமென்றால், அந்த அரசியலமைப்பு போதாதாம்; அதனால் புதிய அரசியல் தீட்டுவோம—அதன்படி மாகாண சர்க்கார்களை அழிப்போம்-மாநிலத்துக்கோர் சட்டசபை ஏன்?—அங்கு எதற்காகச் சில மந்திரிகள்?—டில்லியில் ஒரே ஒரு பார்லிமெண்டு போதும், இங்கிலாந்திலிருப்பது போல! ஒரு பிரதம மந்திரிபோதும், நேருவைப்போல—அவருக்குச் சில அமைச்சர்கள் இருந்துவிட்டால் போதும்—என்று திட்டம் தீட்டி அளிககிறார்.

ஆச்சாரியார், இதுபோலவே ஆனால் கொஞ்சம்நாசுக்காக எழுதினார் 'கல்கி'யில்—மண்டலவாரியாக நாட்டைப் பிரித்து, பொது கவர்னர், பொது மந்திரிசபை மூலம், ஆளலாம் — இப்போதிருக்கும் மாகாணங்களை ஜில்லாக்களைப் போலாக்கிவிடலாம் என்பதாக.

அதனையும் மிஞ்சுகிறது, மகஜனின் ஆசை. இந்தியா முழுமையும ஒரே நாடாக்க, மாகாண சாக்கார்களையும் சட்டசபைகளையும் ஒழிக்கவேண்டுமாம்; குமரி முதல் இமயம்வரை ஒரே நாடாக இருக்கவேண்டுமாம்.

'மாஜி' நீதிபதியருக்கு, இப்படியோர் விபரீத மதிநுட்பம், ஏற்படக் காரணம் என்ன தெரியுமா? இருண்ட மேகங்கள் திரண்டு வருகிறதாம், அவருடைய மனக்கண்ணில் இந்தியாவின் எதிர்காலம், இன்றுள்ள நிலைமையில் என்னாகுமோ எனும் திகைப்பும் பதைப்பும் உண்டாகிவிட்டதாம்!

**"ஏக இந்தியா, உருவோடு விளங்கக் காரணம் இன்றுள்ள காங்கிரஸ் மேலிடந்தான். அதனுடைய சக்தியாலும் பலத்தாலும்தான் இந்தியாவின் ஐக்கியம் இன்று சிதறாமல் இருக்கிறது. எல்லா மாநிலங்களிலும், காங்கிரஸ் சட்டசபைகளும் மந்திரி சபைகளும் இருப்பதால், ஐக்கியம் சிதையாமல் பாதுகாப்பது மேலிடத்துக்குச் சுலபமாக இருக்கிறது. இப்போது வளர்ந்துவரும் அரசியல் நிலையின் விளைவாக, இந்த நிலைமை மாறி, சில மாநிலங்களை ஆள்வது கம்யூனிஸ்டுகளாகவும் சில இராஜ்யங்களில் பிரஜா சோஷியலிஸ்டு சர்க்காரும், வேறு சில மாகாணங்களில் ஜனசங்கமும் இந்து மகாசபையும் அரசுப் பொறுப்பை ஏற்கும் நிலை வந்துவிட்டால் என்ன ஆவது? மேலிடம், எப்படி அப்போது ஐக்கியத்தைக் கட்டிக் காக்க முடியும். மத்திய சர்க்கார், அப்போது எப்படி, ஒழுங்காக நடக்க இயலும்?"**

இந்த அச்சம் துளைக்கிறது, அன்பர் மகஜனை. அதனால், இந்தியா முழுவதற்கும் ஒரே அரசு என்றாக்கிவிடலாம் என்று யோசனை சொல்லுகிறார்.

அவர் கூற்றுப்படி பார்த்தால், இந்திய ராஜ்யம் ஏற்படும் — மாகாணம் என்பது ஜில்லாவைப் போலாகிவிடும்— இப்போது ஜில்லாவை ஆள எப்படி ஒரு கலெக்டர் இருக்கிறாரோ அதுபோல் சென்னைக் காரியாலத்திலிருந்தபடி ஒரு காரியதரிசி ஆட்சி நடத்துவார்.

இத்திட்டத்தை அவர் எந்த அடிப்படையில், நமக்கு அளிக்கிறார் எனபதனை அறியும்போது ஆச்சரியமும் ஆவேசமுமே உருவாகிறது.

சரித்ரீதியிலா?-அல்ல, என்கிறார்!

அரசியல் வரலாற்று அடிப்படையிலா?—கிடையாது அப்படி என்பதையும் அவரே தெரிவிககிறார்.

ஆனால், மொழியின் மூலாதார அடிபபடையிலாம்; பாரதமுழுமைக்கும் ஒரே ஒரு மொழி உண்டு எனும் உண்மையினைகொண்டே இந்தஉயரிய திட்டம் அளிக்கப்படுகிறதாம்.

**"சரித்ரீதியிலும், அரசியல் வரலாற்றிலும் இந்தியா ஒரே நாடாக இருந்து கிடை**

**யாது. ஆனால், கலாச்சாரரீதியிலும், மொழியின் அடிப்படையிலும், இந்தியா பிரிக்க முடியாதபடி இருக்கிறது''**

*கலாச்சார ரீதியிலும்! மொழியின் அடிப்படையிலுமாம்!! ஏக இந்தியாவை, ஒரே நாடாக்கிக் கட்டிக் காக்கலாமாம்.*

*கலாச்சாரம்,* என்று மகஜன் குறிப்பிடுவது—ஒரே மதம் என்பதை; இமயமுதல் குமரிவரையில் ஒரே மதமாக இந்துமதம இருக்கிறதாம்—அதனால், ஒற்றுமை சாத்யமாம்! பைத்யக்கார மனுஷர்—இந்து மதத்திலிருக்கும் எண்ணற்ற கருத்து வேற்றுமைகளையும் கலாட்டாக்களையும மத்யஸ்தம் செய்யவே ஆள்தேடவேண்டியிருக்கிறது இடத்துக்கு இடம்—அது, அறியாதவர்போல, மதத்தின் மூலம் ஒற்றுமை காண முயல்கிறார்.

அதைக்கூட விட்டுத் தள்ளுவோம், அடுத்தபடி மொழியின் மூலம் என்று சொல்கிறாரே அதுதான் நமக்கு அலையையும் புனலையும் உண்டாக்குகிறது, உள்ளத்தில்.

வாளும் வேலும்கொண்டு வாழ்ந்த பரம்பரையென்கிறோம், உலக மொழிகளுள் முதலாய மொழி என்கின்றனர் அறிஞர் பெருமக்கள். ஆரியம்போல் வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமை திறனை வியந்து வாழ்த்துவோம் என்கிறார் பேராசிரியர் சுந்தரனார், தனித்து நிற்கும் மொழி தனிப் பெரும் மொழி அதுவே தமிழ் மொழி. அதன் வயிற்றுப் பிள்ளைகளே கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் துளுவும் என்று—நாமட்டுமல்ல, ஆச்சாரியாரே ஒப்புக்கொள்ளுகிறார். அப்படிப்பட்ட தமிழை மொழியாகக் கொண்ட இனம், தனக்கென்று தனியானதோர் வாழ்க்கை முறையைக் கொண்ட இனம், உலகத்தின் புகழுக்கு ஆளான இனம், இதோ இருககிறோம — இன்னும் உயிர் போகாத நிலையில். எனினும் மகஜன் அறிவிக்கிறார், இந்தப் பூபாகம் முழுமைக்கும் பொதுவான பரம்பரைச் சொததாகயிருந்திருக்கிறதாம், சமஸ்கிருதம். ஆங்காங்குள்ள மொழிகள் யாவும் ஒரு தாயின் வயிறறில் பிறந்த இரு குழந்தைகள்போலத் தானாம—எனவே, மொழித்துறையில் ஐக்கியமிருந்ததாம் அந்தக்காலததில், அதனால், மனோ தைரியத்தை விட்டுவிடவேண்டுவதில்லையாம் — கலாச்சாரம், மொழித்துறை இரண்டுமிருப்பதால் அரசியலமைப்பைச் சரிசெய்துவிட்டால், ஏக இந்தியா காப்பாற்றப்பட்டு விடுமாம்!

உயர்நீதி மன்றத்திலே அமர்ந்திருந்தவரின் உள்ளம் உதிர்க்கிறது இத்திட்டத்தை—எதிர்காலம் இருளடையாமலிருக்க வேண்டுமானால் இதைவிட வேறு மார்க்கமில்லையாம்.

வட்டாரத்துக்கொரு அரசு! தாய்மொழியில் அரசு! நாங்களும் வாழ ஒரு அரசு! எமக்கொரு தனியரசு! —என்று இங்குமட்டுமல்ல, உலகின் ஒவ்வொரு பாகத்திலும் உரிமைக் குரல் கேட்கிறது.

இப்படி உரிமைகுரல் எழும்புவதே, இந்த நூற்றாண்டின் சிறப்பு என்றும் கருதப்படுகிறது. ஆனால், மகஜன், புலி பசு ஓநாய் எல்லாவற்றையும் போட்டு அடைக்க வேண்டும் ஒரு கூண்டுக்குள் என்று திட்டம் தீட்டித்தர வருகிறார்.

ஜனநாயகம் பேசுகிறது, உலகு; நீதிபதியார், சர்வாதிகாரப் பாதையைக் காட்டுகிறார்.

நீதிபதியாரின் இத்திட்டத்தை ஏற்பதற்குப் பதில், முன்னாள் பார்வர்ட் பிளாக் செயலாளரான ஷீல் பத்ரயாஜீ என்பார் வெளியிட்டிருந்தாரே ஒரு வேண்டுகோள், "பண்டித நேருவை சர்வாதிகாரியாக்க வேண்டும்" என்று. அப்படிக்கூடச் செய்துவிடலாம்! இதைவிட, அது மேல்தானே!

பெரியவர்கள், நாட்டைப் பரிபாலிக்கும் பேறு பெற்றவர்கள், நாடு வாழ ஆலோசனைகளைத் தரவேண்டியவர்கள், எப்படி யெப்படி விசித்திரமான திட்டங்களைத் தருகிறார்கள்.

ஏக இந்தியா எனும் குரல், செல்லாக் காசாகிறது என்றதும், எப்படி எப்படி விநோதமான யோசனைகள் வெளியாகின்றன. மகஜன் தெரிவித்த இந்த யோசனையைப் போல ஒரு கருத்தை நேரு பண்டிதரிடம் தெரிவித்தபோது, "இது சாத்யமற்றது" என்று தெரிவித்தாராம்.

ஆனால், இப்போது, காங்கிரஸ் மேலிடத்திலிருப்பவர்களின் செயல்களைக் கவனிக்கும்போது, அவர்கள் மனதிலும் இப்படியொரு ஆசை வந்திருக்கவேண்டுமென்றே தெரிகிறது. இல்லையென்றால், இப்படி இரண்டு மூன்று மொழிகளை ஒன்றாகச் சேர்த்து அடைக்கும் இராஜ்ய யோசனைகளை ஆதரிப்பார்களா?

மகஜன், இந்தியாவை ஒரே நாடாககிவிடலாம்—என்றார். அதன் மூலம், மாகாண அரசு, சட்டசபைகள் யாவற்றையும், ரத்து செய்துவிட்டு, பார்லிமெண்டை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்றார்.

காங்கிரசாரின் தட்சிணப் பிரதேச யோசனையின்படியும் அது தானே ஏற்படப் போகிறது — மகஜன், பார்லிமெண்டு போதும் என்றார்! இவர்கள் குட்டிப் பார்லிமெண்டு நாலைந்து போதும், என்கிறார்கள்!!

நாட்டின் நாடி எப்படியுளது என்பதை அறியாமல், 'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்பார்களே, அது போல, இந்தியாவின் ஐக்கியத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக ஏதேதோ யோசனைகளைச் செய்து வெளியிடுகிறார்கள்.

அப்படி வெளியிடும் எவரும், ஒருகாலத்தில் வாழ்ந்து வீழ்ந்துபோன மாபெரும் இனம் ஒன்றிருக்கிறது! அதுகண்திறந்து பார்க்கவும் ஆரம்பித்து விட்டது! என்பதை உணராதவர்கள் போலவே, தோன்றுகிறார்கள்.

அவர்களனைவரையும் எச்சரிக்கிறோம், "திராவிடம் என்றும் அடிபணியாது! அது கொண்டிருக்கும் விடுதலை வேட்கையைத் தணிக்க யாராலும் இயலாது!!", என்று உணருமாறு.

மகஜன் கூறுவதுபோல, இருண்ட மேகங்கள் திரளத்தான் ஆரம்பித்துவிட்டன; பெருமழை வரத்தான் செய்யும்; அதைத் தடுக்க முயல்வது, இயலாது ஒருபோதும். ஏனெனில்; இமயமுதல், குமரிவரை ஒரே ஒருமொழியில்லை! ஒரே வித மனோபாவமும் இல்லை!!

ஒவ்வொரு மொழி மக்களுக்கும், தமது மொழி, தமது மக்கள் எனும் ஆர்வம் அதிகமாகிவிட்டது.

அதனைக் குறைக்கவோ, தடுக்கவோ யாராலும் முடியாது.

'இந்தியா', எனகிற பூகோள அமைப்பு, விரைவில் மாறத்தான் செய்யும்.

வேண்டுமென்றால், சென்னை தி. மு. க. முதல் மாநில மாநாட்டில் அப்போதைய பொதுச் செயலாளர் அறிவித்தது போல **"உலகமுழுமைக்கும் ஐ. நா. சபை என்று ஒன்று இருந்து பொதுப் பிரச்னைகளைக் கவனிப்பதுபோல, இந்தியாவுக்குள்ளும் ஒரு இந்திய நாடுகள் சபை இருக்கக்கூடுமே ஒழிய, ஏக இந்தியாக் கனவு இனிப் பலிக்காது."**

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

ளவே முடியவில்லை"—என்று மேதைப் பேச்சளித்து, மொழிவழி அரசு அமைவதுதான், ஜனநாயகத்துக்கு வெற்றிதரும் என்றார்.

கட்ஜூ, நேருவின் நேசத்தைப் பெற்று, தேசத் தலைவர்களிலே ஒருவராக விளங்கிடும், காங்கிரஸ் பிரமுகர்: கண்டிப்பானவர்; அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்; அவர், மொழிவழி அரசுமூலமே ஜனநாயகம் உயிரூட்டம் பெறும் என்று. 1953ல், செப்டம்பர் 8ம் நாள் டில்லியில் பேசினார்; நேரு பெருமகனார், இதை மறுத்தாரில்லை. இன்றோ, அதே டில்லியில், பலமொழி ராஜ்யமே சாலச் சிறப்புடையது என்று கூறப்படுகிறது — காரணமும் காட்டப்படுவதில்லை.

மத்ய பாரதத்தைச் சேர்ந்த தேஷ்முக் எனும் காங்கிரஸ் தலைவர் அது காலை, பல மொழி ராஜ்யங்கள்தான் இந்தியாவின் ஒற்றுமையைவளர்த்திடும் என்று கருதுவது தவறு—என்று இடித்துரைத்தார்.

நியோகிகார் எனும் பம்பாய் காங்ரஸ் தலைவர், நீண்ட காலமாக, தூய்மையானது; தேவையானது என்று காங்கிரஸ் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிவழி ராஜ்ய அமைப்புத் தத்துவத்தை, இன்று கசக்கிறது என்று காங்கிரஸ் மூலவர்கள் ஏன் கூறுகிறார்களோ, தெரியவில்லையே; சரியில்லையே அவர்தம் போக்கு, என்று கூறினார்.

இந்தியாவில், நாம் ஏன் மாகாணங்களைப் பிரித்து அமைக்கிறோம், அறிவீரா? என்று கேட்டு விட்டு, கட்ஜூ பதிலளிக்கிறார், இந்தியாவின் ஒற்றுமையைத் தக்க விதத்தில் பாதுகாக்கவும், ஜனநாயகம் திறமையுடன் பலனளிக்கவும், சிறு அரசு அமைப்புகளே தேவை. அரசு, சிறிய அளவினதாக இருந்தால்தான், ஆட்சிமன்றங்களிலே மக்களின் குரலுக்கு மதிப்பு இருக்கும், ஆட்சி நடைபெறும் விதம்பற்றிமக்கள், அறிந்து கொள்ள முடியும், ஆட்சியின் போக்கை மக்கள் கண்காணிக்க இயலும். எனவேதான், சிறிய அளவினதாக ராஜ்யங்கள் இருத்தல் வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்—என்று அறிவளித்தார். இன்றோ, அதே டில்லியில், "என்ன அறிவீனம்! என்ன அறிவீனம்! மொழிவழி அரசு என்பது காட்டுமிராண்டித் திட்டம், சிறிய அரசு நாட்டொற்றுமையைச்சீர்குலைக்கும்" என்று பேசுகிறார் பண்டிதர்—காரணம் காட்டாமலேயே கண்டிக்கிறார்.

இந்தியா எங்கணும், மொழிவழி ராஜ்யங்கள் அமைந்திடவேண்டும் என்று நேரு பண்டிதருக்கு எடுத்துரைக்க ஓர் தனி மாநாடே கூட்டினர் செப்டம்பர் 26ல், 1953ல். அதிலே நேரு பண்டிதரால் அலட்சியப்படுத்திவிட முடியாத வகையில் நாட்டுப் பணியாற்றிய காங்கிரஸ் தலைவர்களும் கலந்துகொண்டனர். பட்டாபி சீதாராமையா, மொழிவழி ராஜ்யம் அமைவது, இந்தியாவைப்பிளவுபடுத்துவதாகும் என்று எண்ணுவது பெரும் பிழை, தவறான வாதம்—என்று கருத்துரை வழங்கினார். அவர் இன்று கவர்னர்! நேரு பெருமகனாராலேயே இந்த ஏற்றம் அளிக்கப்பட்டது. இன்றோ பட்டாபி எதை அறிவீனம் என்று கூறிக் கண்டித்தாரோ, அது டில்லியில் பேரறிவு என்று கொண்டாடப்படுகிறது.

மனு, வேண்டுகோள், மாநாட்டுத் தீர்மானம், உண்ணாவிரதம், பொட்டி ஸ்ராமுலுவின் உயிர்த் தியாகம், இத்தனைக்கும் அசைந்து கொடுக்காத இந்த ஆட்சி, ஆந்திரம் பெற்றே தீருவதென்று, மக்கள் வீறுகொண்டெழுந்து வீதிகளில் வந்தபிறகுதான், வழிக்கு வந்தது-ஆந்திர நாடு தந்தது! இம்முறைதான், ஏற்றது, என்று ஆட்சியாளர்கள், மொழிவழி அரசு கோரும் மற்றவருக்கும் கூறுகின்றனரா? என்றே கேட்டுவிட்டார், ஒருவர், மக்கள் மன்றத்தில், அன்று. இன்று, நடுவீதியில் மக்கள் கூடினால் சுட்டுத்தள்ளப்படுவர் என்று மிரட்டுகிறார், ஜாலியன்வாலா படுகொலையைக் கண்டித்து, மனிதருள் மாணிக்கமான, மாபெரும் தலைவர்—ஜவஹர் பண்டிதர்!

மொழிவழி அரசு கூடாது என்று, இன்று, பண்டிதர் பேசுவதைப் பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை ஆனால் தமது எண்ணத்தை வெளியிட அவர்கட்கு உரிமை அளிக்கப்படவில்லை—மீறுவோர்மீது கட்டுப்பாடு எனும் கட்டாரி வீசப்படுகிறது — எனவே பலர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிட வேண்டி ஏற்பட்டுவிட்டது.

உள்ளத் தூய்மை கொண்டவர்கள், ஒருவரிருவர், இன்றும் முழக்கமிடுகின்றனர் — வீரமும் உரிமை வேட்கையும் அறவே அற்றுப் போய்விடவில்லை.

**முகப்பில்....**

**மலேயா தீபகற்பத்துக்கு சுதந்திரச் செய்தியை அளிக்கும் வாய்ப்புபெற்ற மலேயா முதலமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான்.**

காட்கில், அமிருதசரசிலேயே பேசுகிறார்.

அந்த அவையில், பல தலைவர்களின் வாழ்வை ஆக்கவும் அழிக்கவும் வல்லமைபெற்ற பண்டிதர் இருக்கிறார் என்பதை அறிந்தும், அவர் ஆதரவு ஷேக் அப்துல்லாக்களை, ஷேரே காஷ்மீர் ஆக்கும், அவர் வெறுப்பு, அதே அப்துல்லாவை கைதியாக்கி, விசாரணையுமின்றிச் சிறைக்குள் இருக்கச் செய்திடும்—என்பதை அறிந்தும், அஞ்சாது கூறுகிறார், பலமொழி ராஜ்யம் பற்றிய தத்துவார்த்தம் பேசுவகள், கேட்டு ரசிக்கிறேன். ஆனால், அதை நடைமுறைத் திட்டமாக்கி, என் நாட்டை என் நாட்டவருக்கு அளிக்காது இருப்பீரேல், மராட்டிய மண்டலம் அமைத்து, பம்பாயை மராட்டியருக்கு அளித்திடாது போவீரேல், பெரியீர்! பேராற்றல் கொண்டோரே! நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்—கட்சி பெரிது, என் நாடல்ல, மக்களல்ல, என்று கூறிக்கிடந்திடமாட்டேன், அறப்போர் தொடுத்து, உரிமையைப் பெறவே உறுதிகொள்வேன், என்று பேசுகிறார்.

மொகலாய ஆதிக்கத்தின் முன்பு நாம் எங்ஙனம் தலைகாட்ட முடியும், என்று கோழைகள் குப்புறக் கவிழ்ந்த காலை, குன்றேறிக் கொடி நாட்டிய மாவீரன் சிவாஜியின் மரபு பட்டுப்போகவில்லை. காட்கில், மரபு காத்திடுகிறார்.

1953, அக்டோபர் 1ல் ஆந்திர அரசு அமைந்தது; மொழி வழி அரசு அது.

பொட்டியின் உயிரைக் குடித்தான பிறகு, பெட்டிப் பாம்பானார் பண்டிதர், கொட்டு முழக்குடன், கர்னூல் வந்தார், ஆந்திரருக்கு அரசு அமைத்துத் தந்தார்.

தந்தகாலை, வாழ்த்தியோரும் வரவேற்றோரும் கூறினர், இதோ ஓர் புது அரசு—மொழிவழி அமைகிறது; இது எந்த வகையில் வளர்ச்சி பெறுகிறது; இதனால் தேசியம் எந்த வகையில் பாதிக்கப்படுகிறது, என்பதனைப் பார்த்து, பிற ராஜ்யங்களை, அடுத்தடுத்து அமைப்போம் என்று கூறினர்,

இன்று, என்ன இழிவும் பழியும் வந்துற்றது?

ஆந்திர அரசு அமைந்தான பிறகு, என்ன அல்லலும் அவதியும் வந்துற்றது.

உறவு கெட்டு விட்டதோ? அல்லது உள்ளன்பு பட்டுப்போயிற்றோ? இல்லையே!

ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கூறுவதுபோல, பிரிந்து சென்று தனி ராஜ்யம் அமைத்துக்கொண்ட பிறகு, ஆந்திரர் தமிழரிடம் முன்பெலாம் கொண்டிருந்த கசப்பும் கிலேசமும் போக்கப்பட்டு, இன்று அன்பராய், நண்பராய், தொடர்புகொண்டு மகிழ்கின்றனர்.

அதுபோன்றே, மொழிவழி அரசு அமைந்து விட்டால், பாரதம் பிளவுபட்டுவிடும் என்று பீதி காட்டினர், ஆந்திர அரசு, பிளவுச்சக்தியாகவா இன்று உளது?

எனின், இன்று மொழிவழி அரசு கூடாது, கேடு பயப்பது, என்று கூறிடக் காரணம் என்ன?

தம்பி! கொண்டைக்கு ஒரு செண்டு மல்லிகை கேட்டாளாம், கொண்ட கணவனிடம்; அந்த குணக்கேடனோ, 'கொண்டை உள்ளமட்டும் இவள் செண்டு கேட்டுத் தொல்லை தந்தபடி தான் இருப்பாள், எனவே, செண்டு தேடிடும் சங்கடம் நமக்கு இல்லாமலிருக்க, இவள் கொண்டையை அறுத்தெறிவோம், என்றானாம்.

மொழிவழி அரசு என்ற திட்டத்தின்படி, பம்பாய் மராட்டியருக்கு, தேவிகுளம் பீர்மேடு ஆகிய தமிழ் வட்டாரங்கள் தமிழ்நாட்டுக்கு, என்பது குறித்து, கிளர்ச்சி இருக்கிறது; இதிலே அநீதியான தீர்ப்பு வழங்கினர் நேரு; எதிர்க்கின்றனர், உரிமை வேட்கை கொண்டோர்; இதனைக் கண்டு, கொண்டை இருந்தால் அல்லவா, மல்லிகைச் செண்டு வேண்டும் என்பாள், இதோ, பிடித்திழுத்துவா, கொண்டையை அறுத்து எறிகிறேன் — என்கிறார் பண்டிதர். மொழிவழி அரசு என்று பேசுவதால் அல்லவா, இது யாருக்கு, அது யாருக்கு என்று சச்சரவு கிளம்புகிறது, மூலத்துக்கே வேட்டு வைத்து விடலாம் என்று கூறுகிறார். நீதியா? வணிகப் பெருங்குடியினரே! வாழ்வளிக்கும் தொழில் பல புரிவோரே! நாட்டின் கண்மணிகளாம் மாணவத் தோழர்காள்! நீதிதானு, கூறுங்கள்.

உமது தீர்ப்பு, பிப்ரவரி 20ல்; நாடறியச் செய்ய வேண்டும்.

காந்தியார் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை வெட்டிப் புதைக்கிறார்கள்

முப்பதாண்டுகட்கு மேலாக நாட்டவருக்கு தரப்பட்ட வாக்குறுதி மீறப்படுகிறது.

தேர்தல் பலவற்றிலும் மக்களுக்குத் தரப்பட்ட நம்பிக்கை தகர்க்கப்படுகிறது.

ஆந்திரர் பெற்று பயன் காணும், மொழிவழி அரசு, நமக்கு மறுக்கப்படுகிறது.

மொழிவழி அரசு கேட்டால், விழியில் ஒன்றினை இழந்துவிடவேண்டுமாம்—தேவிகுளம், பீர்மேடு கிடையாதாம்!

தேவிகுளமும் பிறவும் தேவை என்று நாம் கேட்டாலோ, மொழி வழி அரசே கிடையாதாம்!

கொண்டை மிஞ்ச வேண்டுமானல், செண்டு கேட்காதே! —நேரு கூறுகிறார்.

நேர்மையுள்ளம் படைத்தோரே! இதனை மாற்றிட வழி இருக்கிறது எல்லா ஜனநாயக நாடுகளிலும் கையாளப்பட்டு வெற்றி அளித்திட்ட வழி, காந்தியார் கைகண்ட மருந்தாக உபயோகித்த வழி கடை அடைப்பு, பொதுவேலை நிறுத்தம்.

நீதி மறுக்கப்படுகிறபோது, நேர்மை நசுக்கப்படுகிறபோது, உரிமை அழிக்கப்படுகிறபோது, தன்மானம் தகர்க்கப்படுகிறபோது, அன்பர்காள்! பழந்தமிழ் வீரன், கட்கமேந்திச் சென்றான் களம் நோக்கி, நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், பிப்ரவரி 20, ஒருநாள் மட்டும் கடை அடைப்பும் பொதுவேலை நிறுத்தமும் செய்து, இந்தப் புனிதமான காரியத்தில் பங்கேற்றுக்கொள்ளுங்கள், — என்பதனைத் தம்பி, அங்காடியிலும் அலுவலகங்களிலும் உள்ள அன்பர்களிடமெல்லாம், கூறு.

தம்பி! காங்கிரஸ் கட்சியினரில் சிலருக்கு நாம் ஈடுபட்டுள்ள இந்தக் காரியத்தைக் கெடுப்பது, ஏதோ 'தேசிய கைங்கரியம்' என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது, தினமணி இதற்கான திருத்தொண்டினை நடத்திவைத்து இருக்கிறது.

காலிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்வர் என்று கிலி மூட்டியும்,

பலத்த போலீஸ் வளையம் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும், கடைகளைத் திறவுங்கள் என்று ஆசை காட்டியும்,

இப்போது ஒரு முடிவும் தமிழருக்கு விரோதமாகச் செய்யப்படவில்லை என்று நயவஞ்சகம் பேசியும், அந்த 'அன்பர்கள்' சர்வகட்சிக் கூட்டணியின் முயற்சியைக் கெடுக்கலாம் என்று எண்ணி வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

சிலர், இந்தக் கூட்டணியினரைக் கூண்டிலே தள்ளிவிடுங்கள் முதலில்—பிறகு நாங்கள் மற்ற ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்கிறோம் என்று சர்க்காரிடம் 'காவடி' எடுக்கிறார்கள் என்றும், ஆச்சாரியார் செய்த அதே தவறை நாமும் செய்வதா, ஆப்பை அசைப்பானேன் பிறகு அதனுல் அவதிப்படுவானேன்—நடப்பது நடக்கட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிடுவோம் என்று சிலரும் பேசுகின்றனராம்.

கடைகள் மூடிக்கிடக்கட்டும், செயலற்றுக் கிடக்கட்டும் நாடு, நாங்கள் மறுதினம் 'சேதி'யை முழுவதும் இருட்டடிப்பு நடத்திவிட மாட்டோமா! என்று தேசிய இதழாசிரியர்கள் பேசுகிறார்களாம்.

கண்ணை மூடிக்கொண்ட பூனை உலகமே இருண்டுவிட்டது என்று எண்ணிக்கொண்டதாமே, அது போல.

இருட்டடிப்பு மூலமோ இடர் தருவதன் மூலமோ, எதன் மூலம் நமது ஏற்பாட்டினைக் கெடுத்திட எண்ணிலுைம், தம்பி! நாம் நமது கடமையைக் கண்ணியத்துடன் செய்து முடித்தோமா என்ற ஒரே எண்ணம் தான், உனக்கு இருக்க வேண்டும்.

எவ்வளவு குத்திலுைம், சகித்துக்கொள்ள வேண்டும்.

தாக்கிலுல் தாங்கிக்கொள்ள வேண்டும்.

சிறையில் தள்ளிஞல் சிரித்த முகத்துடன் செல்லவேண்டும்.

இன்று நமது தூய்மை நிரம்பிய இந்தக் காரியத்தைக் கெடுத்திடக் கருதும் காங்கிரஸ்காரர்கள்கூட, அவர்கள் ஏசினுலும் எரிச்சலூட்டினுலும், எதிர்த்தாலும், இழிமுறையால் தாக்கினுலும், தம்பி! தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும், உன் உள்ளத்தில் ஒரு துளியும் ஆத்திரம், எழலாகாது, உள்ளத்து உறுதியும், கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும் திறனையும் கண்டு, அந்தக் காங்கிரஸ் நண்பர்களேகூட தமதுபோக்கினைமாற்றிக்கொள்வர்.

தம்பி! நாமென்ன கண்டோம், இன்று நமக்கு 'விரோதம்' செய்யும் காங்கிரஸ்காரர்களிலே எத்தனை பேர், எதிர்காலத்தில் நமது கிளைக் கழகச் செயலாளர்களாகப் போகிறார்களோ!!

அவர்களெல்லாம், இன்று இல்லாவிட்டால் நாளை, நமது 'முகாம்' வந்து சேருவர் என்ற எண்ணத்துடனேயே, உன் பணி அமைந்திருக்கவேண்டும்.

அவர்கள் சிறிதளவு சிந்தித்துப் பார்த்தால், பிப்ரவரி 20ல் நாம் மேற்கொண்டுள்ள, அறநெறியின்படி அமைந்துள்ள காரியம், அவர்களின் தன்மானத்தையும் சேர்த்துக் காப்பாற்றிடுவதற்கே என்பது புரியும்.

தேவிகுளம் பீர்மேடு ஆகியவை, தமிழ் நாட்டுக்குத்தான் என்பதை, காங்கிரஸ் அமைச்சர்கள் உட்பட ஆதரித்தனர், சென்னை சட்டசபைகளிலே தீர்மானம், ஆர்வத்துடன் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரஸ் கமிட்டியிலும் இதே கோரிக்கை!

கக்கன் அவர்களும் இதற்கு உறுதிமொழி அளித்தார்.

காமராஜரோ, நான் கவனித்துக் கொள்ளுகிறேன் என்றார்.

சுப்ரமணியம், கனம்—புள்ளி விவரங்களாகக் கொட்டிக் காட்டினார், நமக்குத்தான் தேவிகுளம் என்று; பூரிப்புடன் நேருவுக்குத் தமிழர் என்றாலே தனியான அன்பு, ஆகவே அவர் நியாயம் வழங்குவார் என்றார்.

நாம், தேவிகுளம் பற்றிப் பேசிய போதெல்லாம், ஏதுக்கு இதுகள் வீண் கூச்சலிட்டுக் கிடக்கின்றன! எமது தலைவர்கள் தேவிகுளத்தைப் பெற்றே தீருவர்; என்று காங்கிரஸ் நண்பர்கள் கூறினர்.

இன்று, எல்லாருடைய ஆசையிலும் மண்விழுந்து விட்டது. நாமெல்லாம், எதிர்க்கட்சிக்காரர்கள் எனவே, நம்மைத் துச்சமாக மதிக்கிறார்கள், சரி, பொறுத்துக்கொள்வோம், காமராஜர் கக்கன், சுப்பிரமணியம் பக்தவத்சலம், மேல்சபை கீழ்சபை, காங்கிரஸ் கமிட்டி, தீர்மானம், எல்லாமே இன்று துச்சமாக ஒதுக்கித் தள்ளபபடுகிறதே, இதற்கென்ன சொல்லுகிறார்கள். இந்த வெட்கக்கேட்டால் விளையும் வேதனையை எண்ணியாவது, வேலை நிறுத்தத்தில் காங்கிரசார பங்கு கொள்ள வேண்டும்.

பாசமும் நேசமும், பயமும் பக்தியும், பணிவும் கட்டுப்பாடும இருக்கட்டும் மலை அளவுக்கேனும்; தன்மானத்தில் பற்றுதல் இருக்க வேண்டாமா?

எனவே, தம்பி! நீ மட்டும் உண்மையை அவர்கள் உணருமட்டும், பொறுமையை இழக்காமல், ஆர்வம் குன்றாமல், துணை தருவோர் அதிகமா தொல்லை தருவோர் மிகுதியா என்பது பற்றிய கவலையற்று, நமது கடமையை நாம் செய்கிறோம்—என்ற பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்று, பார், தம்பி! பிறகு, அவர்களிலே எத்தனைபேர், 'நம்மவர்' ஆகிறார்கள் என்று!

இன்றே இல்லையா, நமது கழகத்தில்—மாஜி காங்கிரஸ்காரர்கள்!!

ஒன்று மட்டும் உறுதியாக வைததுக்கொள்.

இந்த நற்காரியத்திலே ஈடுபடும் போது, அடக்கு முறை எந்த வடிவிலே வீசப்பட்டாலும், அதனை நாம் தாங்கிக்கொள்ளும் திறமிருக்கிறதே, அது, தாயக விடுதலைக்கான உறுதி அளிக்கிறது. தியாகத் தழும்புகள் ஏறுமுன்பு நாட்டு விடுதலை எங்ஙனம கிடைக்கும். தம்பி! நாம், எத்தகைய மரபினிலே வந்துற்றோம், அறிவாயே!

அன்பே! இந்த 'வடு'... என்று கேட்டிடும் அஞ்சுகத்தை ஆரத் தழுவிய ஆணழகன், "கட்டழகி! கலிங்கப்போரிலே நான் பெற்ற வடு இது... இதோ பார், இது நான் சிங்களச் சீமையிலே பெற்றது, கடாரம் தந்த தழும்பு இது," என்றெல்லாம் அவன் கூறிட, அது கேட்ட காரிகை என் கணவன், கண்ணுக்கு இனியன் மட்டுமல்ல, கருத்துக்கு மிக இனியன், அவன் அம்புலி காட்டவும் அருவியில் நீந்தவும் மட்டுமே பழகியவனல்ல, சீறிப் போரிட, செந்நீர் சிந்திட வல்லவன், புகழ்க் குறிகளாம் போர்த் தழும்பு பெற்றவன்! என்று பூரித்துப் போவாள்!

அத்தகைய தமிழகத்தில் பிறந்தோம்.

இற்றைநாளில் கொற்றம் இழந்தோம், எனினும் நமது இயல்புபட்டுப் போகவில்லை!!

இன்றேகூட. தமிழகத்தில் ஆறாயிரம் தோழர்களேனும் உளர், தமது உள்ளத்தை வென்றாரிடம் உவகையுடன், தியாகத் தழும்புகளைக்காட்டி இது முன்ஷி வந்தபோது கிடைத்த முத்திரை, இது மேதாப் வந்தபோது ஏற்பட்ட வடு. இது தடை உத்தரவை மீறியபோது ஏற்பட்ட சிறுகாயம் இது ஆச்சாரியார் ஆட்சி தந்த தழும்பு என்றெல்லாம் காட்டி நிற்போர்!

எனவே தம்பி' எனக்கு நம்பிக்கை நிரம்ப உண்டு! பிப்ரவரி 20ல்; என் உள்ளம் மேலும் பெருமிதம் கொள்ளத்தக்க விதத்தில், நீ பணியாற்றி வெற்றி பெற்றுத் தருவாய் என்பதும் தெரியும்.

கடுமையான அடக்குமுறை வீசப்படலாம் — என்றாலும், அதற்காகக் கலங்கவா போகிறோம். இல்லை. உட்பகை கூடாது, ஊர்க்கலகம் ஆகாது, கட்டுப்பாடு கெடலாகாது, கண்ணியம் பாழ்படக்கூடாது, பலாத்காரம் தலைகாட்டவேகூடாது, என்பது பற்றித்தான் எனக்குக் கவலையே தவிர, கடுமையான அடக்குமுறைகொண்டு, நம்மைத் தாக்கிடுவரோ துரைத்தனத்தார் என்பதுபறறிக் கடுகளவும் கவலை கொள்ளேன். கொள்பவனும் என் தம்பி அல்ல.

தம்பி! காட்டிலே வேட்டையாடி, கொன்ற புலியின் தோலினைக் காட்டி மகிழ்பவனைத்தான் வீரன் என்று உலகு ஏற்குமே தவிர, காக்கரு வாட்டைப் பக்குவமாகவைத்து பொறியில்விழச் செய்து, நான் கொன்ற எலியின் வால் காணீர் என்று கூறுபவனையா, உலகு மதிக்கும்!

புலித்தோலுக்கும் எலிவாலுக்கும் உள்ளவேற்றுமை, ஒரு வீரனுக்கும் ஒரு வீணனுக்கும் உள்ள வேறுபாட்டினையன்றே விளக்குகிறது.

எனவே, உயிர் போவதாயினும் உரிமை பறிபோகவிடமாட்டோம் என்ற உறுதிப்பாடுகொண்ட என் தம்பிமார்களிடம், எனக்குத் தளராத நம்பிக்கை உண்டு. எனவே, எதிர்ப்புகள் மலையென வளரினும், வெற்றிபெற்றுத் தருவர் என்று உறுதி கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாடு ஒரு நாதியற்ற நாடாகிவிட்டது. என்று பெரியாரின் விடுதலைகூறும் போது, நாமும் நம்மாலானதைச் செய்து, தமிழ் நாட்டில் தமிழர் சிலரேனும் உளர் என்பதைக்காட்ட வேண்டாமா?

பெரியார், இந்தக் கிளர்ச்சியை விரும்பவில்லையாமே என்று கேட்கிறாயா. தம்பி! உண்மை அது அல்ல; பெரியார், இந்தக் கிளர்ச்சியையும் இதைவிடத் தீவிரமான கிளர்ச்சியையும் விரும்புகிறார். அவர், நம்மைத்தான் விரும்பவில்லை — இனி அவரும் நம்மை விரும்பும் வகை ஏற்பட வேண்டுமானால், அவரே பார்த்து, "பயல்கள் பரவாயில்லையே, ஓரளவுக்குச் செம்மையாகவே செய்து காட்டினார்கள்" என்று கூறத்தக்கவிதமாகக் காரியமாற்றிக் காட்டவேண்டும்.

மும்முனைப் போராட்டத் துவக்கத்தின்போதும் அவர் இப்படித்தான், 'இன்றைய வழிப்போக்கர்களின்' மனமகிழ்ச்சிக்காக, இதுகளுக்கு ஒரு போராட்டமா! என்று ஏளனம பேசினார்; ஆனால், தம்பி! நாடே கண்டு ஆச்சரியப்படத்தக்கஅளவில் கிளர்ச்சி வளர்ந்து, இருட்டடிப்பினையும் கிழித்துக்கொண்டு, நாள தவறாமல், நமது கழகச் சேதிகள், எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது கண்டு, அவரே அல்லவா சென்னை கடற்கரையில் கூட்டம் நடத்தினார். நம்மீது சர்க்கார் அடக்குமுறை வீசியது. கொடுமை என்று! இன்று, மீண்டும் ஏளனம் செய்கிறார் என்றுகேள்விப்படுகிறேன்! இதிலே கவலைப்படவோ கோபப்படவோ என்ன இருக்கிறது! நாம்

அவருடன் ஒன்ருக இருந்தபோது கூட இப்படித்தான் வேடிக்கையாகப் பேசுவார், ஏளனத்தால் குத்துவார், எல்லாம், நாம் நமது காரியத்தைச் சரியாகச் செய்யவேண்டுமே என்கிற அக்கரையினுல்தான்!!

✻

பெயரளவில் தமிழ்நாட்டில் தமிழர்களே எட்டுக்கு ஏழு பேர் மந்திரிகளாக இருக்கிருர்கள் என்ருலும், ஒருவருக்காவது தமிழர் இனம்; தமிழ் மொழி, தமிழர் ஆட்சி என்கின்ற உணர்ச்சியே இருப்பதாகத் தெரிவதற்கு அடையாளம் இல்லே.

முதலாவது, தமிழன் என்பதற்கு அறிகுறியாக தமிழ்மொழி உணர்ச்சியாவது எந்தத் தமிழ் மந்திரிக்காவது இருக்கிறதா என்று பார்த்தால், ஏதோ தமிழரை ஏமாற்றி ஒட்டு வாங்குவதற்காக நடிக்கிற முறையில்தான் தமிழ் உணர்ச்சியைக் காட்டுகிருர்களே தவிர, காரியத்தில் காட்டுவது மிக மிக அருமையாக இருக்கிறது.

........................

எனவே, தமிழ்நாடு ஒரு நாதியற்ற நாடாக ஆகிவிட்டது. இந்த மந்திரி சபை காலத்திலாவது இந்த விஷயங்களில் ஏதாவது கவனம் செலுத்தப்படுமா என்று பார்த்தால், நாள் எண்ணவும், சம்பளம் வாங்கவும், நாட்டில் பவனி வரவும், விருந்து, நாட்டியம், கோலாகல வாழ்வு அனுபவிக்கவும் பெருநேரம் செலவாகிவிடுகிறது.

—9-8-55 விடுதலே தலேயங்கம்.

✻

தமிழர்களிடம் இருக்கின்ற தமிழ் மொழிப்பற்று, தமிழ் இனப் பற்று, வடமொழி எதிர்ப்பு, ஆரிய வெறுப்பு ஆகியவற்றை ஒழித்துக்கட்டுவதற்காகவே இம்முயற்சி. (தட்சிணப்பிரதேசம்)

................

இம்முயற்சியில் ஈடுபடுவார்களாஞல் என்ன நடக்கும் தெரியுமா?

.........தமிழ் நாட்டில் இரத்த ஆறு ஓடும்படியாக மாபெரும் இரத்தப் புரட்சியே நடக்கப்போகிறது.

..................

தமிழ் நாட்டைச் சுடுகாடாக்கி, பிணக்காடாக்கி விட்டுத்தான் தட்சிணப்பிரதேசம் என்ற புது இணைப்பைக் காணப்போகிருர்கள மேலிடத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள். இவர்களுக்கும் இவர்கள் கட்சிக்கும் அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்றே கூறலாம்.

9-9-55 விடுதலே-தலேயங்கம்.

✻

இப்போது என்ன சொல்லுகிருய் தம்பி! பெரியாரின் மனம் என்னபாடு படுகிறது பார்த்தனேயா, நாட்டிலே காங்கிரசாட்சியினர் செய்யும் அலங்கோலம் கண்டு.

இதற்காகத்தானே நாம் எதிர்க்கிருேம், பிப்ரவரி 20ல்.

பிறகு, பெரியாருக்கு ஏன் கோபம் வரப் போகிறது.

சரியாகச் செய்வார்களோ இல்லேயோ என்பது அவருக்குள்ள சஞ்சலம். தம்பி! உன் வெற்றி மூலம் அவருக்கு உள்ள சஞ்சலத்தையும் போக்க முடியும். செய்வாயா?

காங்கிரஸ் கட்சிக்காரர்கள், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், தட்சிணப் பிரதேசப் பிரச்சினே பற்றி வாய்மூடி இருந்து வந்தனர். பிற கட்சிகள் கண்டித்தன. அந்தக் கண்டனம் இப்போதே ஓரளவுக்குப் பலன் அளித்திருக்கிறது.

டில்லியிலிருந்து திரும்பிய காமராஜர், தட்சிணப் பிரதேச திட்டத்தை பலரும் கண்டிப்பது தனக்குத் தெரிகிறது என்று நிருபர்களிடம் கூறியிருக்கிருர்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மவுனமாக இருந்ததுபோல நாமெல்லாம் இருந்து விட்டிருந்தால், நாடு, தட்சிணப் பிரதேச திட்டத்தை கண்டிக்கிறது என்பது நேருவுக்கோ, காமராஜருக்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும்? இதனுல்தான், தக்க சமயத்தில் முற்போக்குக் கட்சிகள், தீமை பயக்கும் திட்டங்கள் கிளம்பியதும், கண்டனம் தெரிவிக்கவேண்டியது ஜனநாயகக் கடமையாகிறது!

அதே கடமை உணர்ச்சிதான் பிப்ரவரி 20-க்கும் காரணம்.

காமராஜர், இது தேவையுமில்லே, விரும்பத்தக்கதுமல்ல என்கிருர்.

தேவிகுளம் பீர்மேடு ஆகிய எல்லே குறித்து, டில்லியின் தீர்ப்பு அமுலுக்கு வராது என்ருே. அந்தப் பகுதி மக்களிடம் வாக்கெடுப்பை நடத்தி பிரச்சினேயைத் தீர்த்துக்கொள்ள நேரு சம்மதமளித்திருக்கிருர் என்ருே காமராஜர் உறுதியளிக்கவில்லே.

அர்த்தால் செய்தால், விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நேரிட்டுவிடும் என்பது மட்டும் அவர் காரணமாகக் காட்டுகிருர்.

பொறுப்புணர்ச்சி, அவருக்கு, நம்மைவிட உடனடித்தேவை என்பது உண்மை. ஆனுல், அர்த்தால் நடத்த திட்டமிட்டிருக்கும் சர்வ கட்சித் தலேவர்கள், பொறுப்புணர்ச்சியற்றவர்கள் என்று காமராஜரே கூறமுடியாது.

அர்த்தால், அமைதியாக, பலாத்காரமற்ற முறையில் நடத்தப்படவேணடும் என்பதை கூட்டணித் தலேவர் பி. டி. இராஜன், இப்போதும் ஓர் அறிக்கையில வலியுறுத்தியிருக்கிருர்.

தேவிகுளம் பிரச்சினே சம்பந்தமாக நாடு எவ்வளவு மனவேதனே அடைந்திருக்கிறது என்பதை டில்லி அறிந்தாகவேண்டும். அர்த்தால், அருமையான வாய்ப்பு.

தேவிகுளம் பிரச்சினேயில், காமராஜருக்கும், காங்கிரஸ்கட்சிக்கும் அக்கரை இருப்பது உண்மையானுல், தமிழரின் உரிமையையும், தமிழ்நாட்டின் எல்லேயையும் காத்திடவேண்டுமென்பதிலே முதலமைச்சருக்கு அக்கரையும் நம்பிக்கையும் இருப்பது உண்மையானுல், அவர்; கூட்டணியின் திட்டத்துடன் ஒத்துழைத்து, வெற்றிகரமாக்கி, இந்த அர்த்தால் கட்சிப் பிரச்சினே அல்ல, நாட்டுப் பிரச்சினே என்பதைடில்லியே அறிந்திடச் செய்யலாம்.

எனவே, அர்த்தால் மூலம்ஏதேதோ நேரிடும் என்ற பீதி காட்டாமலும்—கொள்ளாமலும், காமராஜர் துணிந்து பிப்ரவரி 20 அர்த்தாலுக்கு, தமது 'ஆத்மீக ஆதரவு' அளித்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அர்த்தால் சமயத்தில், சமூக விரோதிகள், அல்லல் மூட்டுவோர் என்ற தினமணி வாதத்தை நாடாளும் பொறுப்பேற்றுளளவரும் கூறுவது அழகல்ல.

சர்வகட்சிக் கூட்டணிஅமைதியான அர்த்தாலேத்தான் திட்டமிட்டிருக்கிறது.

நாட்டின் அமைதியிலும் அதே போது, தமிழர் உரிமையிலும், ஜனநாயகக் கோட்பாட்டிலும் காமராஜருக்கு நம்பிக்கை இருக்குமானுல், நிச்சயமாக அவர் நம்முடன் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

தட்சிணப் பிரதேச திட்டம் இப்போதைக்கு இல்லே என்ற அளவு மட்டுமே காமராஜர் அறிக்கை மூலம் தெரிகிறது. இதுவே, மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனுல், தேவிகுளம் பிரச்சினே அப்படியே இருக்கிறது என்பதை எப்படி மறந்துவிட முடியும்! தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின் சித்தூர் ஆகிய தமிழ்ப் பகுதிகளே, கேரளத்துடன் இணேக்கும் திட்டம் உயிரோடு இருக்கிறது. அது மார்ச் மாதத்திலேயே சட்டசபைக்கு வருகிறது.

முன்பே சட்டசபை இதுபற்றி அளித்த தீர்ப்பு, டில்லியால் குப்பை கூடைக்குப் போடப்பட்டது.

மீண்டும் அதே கதி ஏற்படாமல் இருக்கவேண்டும். அதற்கு பிப்ரவரி 20 வெற்றிகரமாக நடைபெற வேண்டும்.

அமைதி குலேயாதிருக்கவும், கலாம் எழாதிருக்கவும், என்னென்ன முறைகளேக் கையாள வேண்டும் என்ற யோசனேகளேக் கூறவும், கூட்டணியின் ஒத்துழைப்பைப் பெறவும், காமராஜருக்கு உரிமை இருக்கிறது. ஆனுல், அச்சத்தைக் காட்டி, அர்த்தாலே கைவிடச் சொல்வதிலே பொருள் இல்லே. எனவே, கூட்டணி திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பை அளித்து, காமராஜர், தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

**அண்ணுதுரை.**

# கவிதை அரங்கம்

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலக்சாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சி யோடு
"அப்படியா! அப்பெல்லஸ்" என்று வேந்தன்
அலர்ந்திட்டான்; அவன்உள்ளம், வேகும் தீயும்
ஒப்பாகா சினத்தீயால் சூழ்ந்து நிற்க,
உவப்பதுபோல் முகத்திரையை மாற்றிக்கொண்டான்
கப்பிஎழும் பெருமூச்சை, செந்தீச் சொல்லை
கட்டிவைத்து களிப்பவன்போல் சொல்ல லுற்ருன்,

"அப்படியா! என் நண்பா! இதனைக் கேளாய்!
ஆருயிரைப் போன்றவன்நீ! இந்நாள் போல
இப்புவியில் எப்பொருளும் கேட்ட தில்லை
ஏந்திழையை—நீகண்ட செம்பொன் மாதை
தப்பாமல் கொண்டிடலாம்; ஆனல் ஒன்று!
தத்துகின்ற கிளியன்னள் உந்தன் சொல்லை
ஒப்புதல்தான் வேண்டும்! ஆம்! அந்தமங்கை
உரைத்துவிடின் நீபெறலாம்! அட்டி யில்லை"

மன்னனவன் நினைத்திருந்தான்; செஞ்சொல் பாவை
மதிகெட்ட நண்பனையே ஏறெடுத்து
தன்கண்ணால் கிஞ்சித்தும் காண மாட்டாள்,
தீயுமிழ்வாள், இச்சொற்கள் கேட்கும் போதே!
என்றிருந்தான் ஆனலோ, அந்தப் பாவை
இச்சொற்கள் கேட்டதுமே சீற வில்லை;
புன்முறுவல் பூத்திட்டாள், விருப்பம் காட்டி.
பொங்கிஎழும் தன்மனத்தைப் பிடித்துக் கொண்டு

பின்பாகத் தன்முடிவைச் சொல்வ தாக
பறந்திட்டான், பெருவேந்தன் இல்லம் நோக்கி;
எந்நாளும், எவ்விடத்தும் எக்கா லத்தும்
இல்லாத பெருந்தோல்வி கொண்ட தைப்போல்
தன்னுவி, உடல்சோர்ந்தான்; சீறிப் பாய்ந்தான்;
தன்முகத்தில் கண்ணெதிரே சேற்றைப் பூசும்
அன்னுரை வாளெடுத்துப் பிணமாய் மாற்றி [என்ருன்.
அமைந்தால்தான் 'நான்வாழ்வேன்!' நன்று-

இருவரையும் வெஞ்சிறையில் வீழ்த்தச் சொன்னன்;
'இரு'என்று பின்னமர்த்தி சோலை சென்ருன்;
ஒருவருமே இல்லாத இடத்தைத் தேடி
உட்கார்ந்தான். எதிர்கொண்ட உலகம் தந்த
விருந்தான பூஞ்செடிகள், மரத்தைச் சேர்ந்து
வருடுகின்ற மென்கொடிகள் இவற்றைக்கண்டான்
வருந்தாத உளம்படைத்த புறவின் காதல்
விளைக்கின்ற வாழ்வையெலாம் நேரிற் கண்டான்

சிந்தித்தான்! வெஞ்சினத்தை விரட்டி விட்டு
சிந்தித்தான! தன் நண்பன் பாவை அன்று
தந்திட்ட சொற்களிலே பெரிதா குற்றம்?
தெரியவில்லை! சிந்தித்தான்! இந்நாள், மேற்கில்
அந்தியிட்ட செந்நிறத்தாள் தன்னை விட்டு
அழகூட்டும் படம்தீட்டும் கலைஞன் நெஞ்சில்
குந்திவிட்டாள்! உயிர்நண்பன் அவளை ஏற்ருன்!
களங்கமின்றி இதையேதான் அவனும் கேட்டான்!

வாளெடுத்து உலகத்தின் உருவப் பாட்டில்
விருப்பம்போல் வெற்றியினைச் செதுக்கு கின்ருேம்;
தூளாக்கும் நகர்களிலே இவளைப்போல
தந்தத்தைப் பழிக்கின்ற சிலைகள், வேண்டு
கோளிட்டு நமக்காகக் காத்து நிற்கும்;
காலடியில் பலவீழும் தொழுதும் பார்க்கும்!
கூருளியால் கற்சிலையைச் செதுக்கு கின்ற
நம்நண்பன்—உயிர்நண்பன் என்ன செய்வான்?

என்றந்த பெருமனத்தான் எண்ணிப் பார்த்தான்;
ஏங்குகின்ற இருவுளத்தை தனது சொல்லால்
ஒன்ருக்கி இணைப்பதற்கு முந்திக் கொண்டான்;
உடனேதன் நன்முடிவை அவர்க்குச் சொல்ல
அன்புடனே அவரில்லம் நோக்கிச் சென்ருன்;
ஆபத்தை எதிர்நோக்கி துடித்து நின்ற
நண்பனுக்கும் மடந்தைக்கும் ஒப்பம் தந்தான்!
நலங்கூட்டும் மங்கலங்கள் முழங்கிற் றங்கே!

**நா. இராசகோபாலன்,**
**சென்னை-7.**

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான் மன்னன்
அலெக்சாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சியோடு
அப்படியா அப்பெல்லஸ் என்று வேந்தன்
அங்கமெலாம் துடிதுடிக்க அருகில் வந்து
"இப்படிநீ செய்வையென எண்ண வில்லை!
என்னருமை நண்பனே! என்னைக் கொன்று
அப்படிவக் கலையுருவை, அணங்கை ஏற்று
அழகொழுகப் பார்த்துவந்து வாழ்வாய்" என்ருன்,

என்றிட்ட வேந்தனது இரங்கற் பாவை
எண்ணினன், கம்பாஸ்பி தனை மறந்தான்
கன்றியநற் காதலினை நட்புக் காக
கணப்பொழுதில் விட்டொழித்துச் சென்ருன் எங்கோ!
தென்றலவன் மென்மேனி தவழும் நெஞ்சம்
தேன்கலந்த சுவைநீரைத் தந்த முத்தம்
கொன்றதவன் அவளன்பை விட்ட பேற்ருல்.
கெஞ்சிநின்ருன் வேந்தனவள் அன்பை முற்றும்!

**வெண்ணெய்வேலன்**
**கொத்தாம்பாக்கம்.**

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில், உணர்ச்சியோடு!
"அப்படியா அப்பெல்லஸ்!" என்று, வேந்தன்
நகைத்தானவன் பேதமையை எண்ணிப்பின்,
"இப்படி வினவியவன் நீயின்றிமாற்ருனுயின்
மாய்த்திடுவேன் அவனுயிரை மறுகணத்துள்!
தப்பாது தருவேன்நீ வேண்டுவதை; உயிரனையாள்
உள்ளத்தை அறிந்தபின்" என்றுரைத்தான்

**அ. இளவழகன்,**
**அறந்தாங்கி.**


அலெக்ஸாண்டர் கவிதைக்கு தோழர்கள் வழங்கும் முடிவுகள்.

# பாக்தாத் திட்டம்

'சீடோ' என்று குறிப்பாகக் கூறப்படும் தென் கிழக்காசியத் திட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளான தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியுசிலாந்து முதலியவைகள், தத்தமது ஆயுத பலத்தையும் இராணுவத் திறமையையும், பிப்ரவரி 16, 17 தேதிகளில், பத்து இலட்சம் மக்களுக்கு முன்னால் பாங்காக் நகரில் செய்து காட்டப் போகின்றனவாம்! கம்யூனிஸக் கொள்கை பரவுகிறது, அதற்கு மாறாக ஒரு கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் எனகிற அமெரிக்க யோசனையின் சின்னம்தான், இந்த சீடோ. இப்போது, இந்தக் கூட்டமைப்புக்குள்ள சக்தியை, பிறருக்கு உணர்த்தவே இந்த விழா கொண்டாடப்படப்போகிறதாம்.

*

நேடோ, என்ஞேர் அமைப்பு வட அட்லாண்டிக் பகுதி நாடுகளுக்கு; சீடோ தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு; இப்போது பாக்தாத் ஒப்பந்தம் என்கிற பெயரால் மத்திய கிழக்கு நாடுகளை ஒன்று சேர்க்க ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது, அமெரிக்க யோசனையால். முன்னேடும் பிள்ளையாக இருப்பது பிரிட்டன். இந்த ஒப்பந்தத்தில் துருக்கி, ஈராக், அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் முதலியவைகள் அங்கம் வகிக்கின்றன. "பாரசீகத்தை எப்படியாவது தடுத்துவிடலாம்" என்றெண்ணியிருந்தார், நேரு பண்டிதர். அதற்காக, பாரசீக மன்னரைக்கூட இந்தியாவுக்கு வந்து உபசரணைகளைப் பெற்றுப் போகுமாறு அழைத்திருந்தார். ஆனால், சின்னட்களுக்குமுன் பாக்தாத் ஒப்பந்தத்தில் பாரசீகமும் சேர்ந்துவிட்டது. அதைக் கேட்டதும், நேரு பண்டிதர், அமிருதசரசில் ஆத்திரம்கொண்டவராகிச் சீறியிருக்கிறார் — "இந்தியாவுக்கு இந்த ஒப்பந்தத்தால் ஆபத்து அதிகரித்திருக்கிறது" என்று அங்கலாய்க்கிறார்.



*

எகிப்து, சிரியா, சவூதி அரேபியா, ஆப்கன், ஜோர்டான் முதலிய நாடுகள், இந்த ஒப்பந்தத்தில் இன்னும் சேரவில்லையாம். அதற்குக் காரணம், இவைகள் ரஷ்யாவிடம் உதவிபெறும் நாடுகளாகயிருப்பது என்று கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தை, ரஷ்யாவும் கடுமையாக எதிர்த்துள்ளது. பாக்தாத் ஒப்பந்தத்தில் சேர்ந்துள்ள பாகிஸ்தான், தனது அதிகாரிகளுடன் எல்லாம் கலந்து ஆலோசனை செய்துகொண்டிருக்கிறதாம் — சில நாட்களாக. ஆலோசனைக்குக் காரணம், 'எப்படியெப்படி படைகளை அதிகரிப்பது' என்பது பற்றியிருக்கும் என்று கூறப்படுகிறது. ஏனெனில், இந்த ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு நாடுகளும், தத்தமது படைபலத்தை அதிகமாக்கிக்கொள்ள வேண்டுமென்பதில் அமெரிக்கா அதிக சிரத்தை கொண்டுள்ளதாம்.

*

'பாக்தாத் திட்டம் கூடாது; அது ஒரு ஆக்கிரமிப்பு அணி' என்று கூறுவோரைப் பார்த்து பிரிட்டன் சார்பில் எ னைன பதில் சொல்லப்படுகிறதென்றால், இது யாரையும் பயமுறுத்த அல்ல. யூதர்களின் நாடான இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையே தகராறு ஏற்படாமலிருக்கத்தான். ஆகவே, யாரும் கவலைகொள்ளவேண்டியதில்லை என்பதாகும். இந்தப் பதில், ரஷிய நாட்டுக்குத் திருத்தி அளித்ததாகத் தெரியவில்லை.

*

"இப்படி ஒரு திட்டத்தைத் தயாரித்துவிட்டு, அதற்காக என்று சொல்லி அமெரிக்காவும் பிரிட்டனும், படைகளையும் தளவாடங்களையும் அனுபபும்; அதற்காகவே, இந்த ஒப்பந்தம்" என்று ரஷியா கருதுகிறது. இதை மறுத்து ஈடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அப்படி ஏதும் கிடையாது. இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் ஏதாவது எல்லைப் பிரச்னை வந்தால், அதுவும் ஐ. நா. சொன்னல்தான் படைகள் அனுப்பப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

*

ஆக, ஒவ்வொரு பிரச்னையிலும், அமெரிக்க—ரஷ்ய தகராறு வளர்ந்துகொண்டு வருகிறதே ஒழிய, குறையும் அறிகுறியைக் காணவில்லை; என்று வருமோ, அந்த நாள்!

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.